ஆணாயினும், பெண்ணாயினும் எவர் நற்செயல் செய்தாலும், அவர் நம்பிக்கை கொண்டவராக இருப்பின் அவருக்கு நிச்சயமாக நாம் தூய்மையான ஒரு வாழ்வினை வழங்குவோம். மேலும் நாம் அவர்களுக்கு அவர்கள் செய்ததை விட அழகான நற்பலனை வழங்குவோம். (திருக்குர்ஆன் 16:98)

# இஸ்லாத்தில் பெண்கள்



முஹம்மது ஸஃப்ருல்லாஹ் கான்

# WOMAN IN ISLAM

(in Tamil)

By

Muhammad Zafrullah Khan

# இஸ்லாத்தில் பெண்கள்

*(இஸ்லாத்தில் பெண்களின் அந்தஸ்து பற்றிய*
*மேற்கத்திய கட்டுக்கதைகளுக்கு*
*உரிய விளக்கம்)*

**முஹம்மது ஸஃப்ருல்லாஹ் கான்**

Tamil Translation of the Book

# WOMAN IN ISLAM

(இஸ்லாத்தில் பெண்கள்)


| | | |
|---|---|---|
| Written by | : | Muhammad Zafrullah Khan |
| Translated by | : | Syed Anwar Ahmad |
| Composed by | : | A. Abdul Nizar |
| Year | : | 2019 |
| Copies | : | 1000 |
| Published by | : | Fazl-e-Umar Printing Press<br>Qadian - 143 516<br>Gurdaspur, Punjab. |
| Printed at | : | Nazarat Nashr-o- Isha'at<br>Qadian. |

Noorul Islam Toll Free No : 1800 103 2131
Tamil Toll Free No : 1800 425 40000

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | |
| இஸ்லாத்தில் பெண்கள் | 7 |
| ஆன்மீக சமத்துவம் | 10 |
| செயல் முறைகளில் உள்ள வேறுபாடுகள் | 15 |
| திருமணம் | 18 |
| கணவன், மனைவி – பொறுப்புகளும் கடமைகளும் | 22 |
| மணவிலக்கு | 25 |
| பலதாரமணம் | 35 |
| தாய் | 40 |
| பெண்களுக்கான பொருளாதார உரிமைகள் | 42 |
| ஆண்கள் மற்றும் பெண்களுக்குரிய பாதுகாப்பை வழங்குதல் | 48 |
| ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் நபிமொழிகள் | 55 |

# முன்னுரை

பல சமூகங்களில் இன்னும் பெண்கள், இரண்டாம்தர குடிமகளாகவே கருதப்படுகின்றனர்; அதன் காரணமாக ஆண்கள் அனுபவித்து வரும் பல அடிப்படை உரிமைகள் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. இந்த பாகுபாட்டை பொறுக்கவியலாத பெண்கள் தங்களுக்கும், ஆண்களுக்கு நிகரான அந்தஸ்து கிடைக்க வேண்டும் எனப் போராட்டம் மேற்கொள்கின்றனர்; துரதிர்ஷ்டவசமாக அது இன்று வரை நாகரீகமடைந்த மேற்கத்திய நாடுகளில் அவர்களை விட்டும் நழுவிச் சென்றுள்ளது. நவீன சமுதாயத்தில், கடிகாரத்தின் பெண்டுலம் எதிர்முனைக்கே சென்று ஒழுக்கக்கேட்டின் வழியைத் திறந்து விட்டிருக்கின்றபோது மேற்கத்திய உலகு இஸ்லாமியப் பெண்களை ஆணாதிக்கம் நிறைந்த உலகில் பிற்படுத்தப்பட்டவர்களாகவே கருதுகிறது.

இதற்கு மாற்றமாக, மார்க்கங்களில் முதன்முதலாக, இஸ்லாம் மட்டுமே, பெண்களுக்கு இதுவரை அறிந்திராத அந்தஸ்தை வழங்கியது. இஸ்லாத்தின் புனித வேதமாகிய திருக்குர்ஆனில் நூற்றுக்கணக்கான வசனங்கள் ஆண்கள் மற்றும் பெண்கள் கடைபிடித்து நடக்க பொதுவான போதனைகளாக உள்ளன. இஸ்லாம் எடுத்துச் சொல்லும் ஒழுக்க நெறிகள், ஆன்மீக நிலைகள், பொருளாதார விஷயங்களில் ஆண், பெண்ணுக் கிடையில் சம உரிமை ஆகியவை எல்லா விமர்சனத்திற்கும் அப்பாற்பட்டதாகும். ஆண்கள் அல்லது பெண்களை விளித்துக் கூறும் திருக்குர்ஆனின் குறிப்பிட்ட வசனங்கள், ஒன்று அவர்களின் உடல் அமைப்பு ரீதியான வித்தியாசங்களைப் பற்றியதாகும் அல்லது சமூக நல்லொழுக்கங்களைப் பாதுகாப்பதில் இஸ்லாம் எதிர்பார்க்கும் அளவுக்கு அவர்கள் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய தொண்டுகள் பற்றியதாக இருக்கும்.

பெரும்பாலும் திருக்குர்ஆன் வசனங்களை ஆதாரமாகக் கொண்ட இச்சிறுநூல், முஸ்லிம் பெண்கள் அனுபவித்து வரும் உரிமைகள், இஸ்லாத்தின் பார்வையில் அவர்களுக்கிடையில் செயல்முறைகளில் உள்ள வேறுபாடுகள், மணமுடிப்பதன் நோக்கம், விவாகரத்து, பலதாரமணம், எவ்வாறு சமூக நல்லொழுக்க நெறிகள் இஸ்லாத்தில் பாதுகாக்கப்படுகின்றன? ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கிறது.

நான் முஹம்மது ஸஃப்ருல்லாஹ் கான் சாஹிப் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்; அன்னார் இந்த மேற்கத்திய சமூகத்தினர் கொண்டுள்ள தவறான கருத்திற்கு உரிய பதிலை இந்நூல் மூலம் தந்திருக்கிறார்கள்.

ஷேக் முபாரக் அஹ்மத்,
இமாம், இலண்டன் பள்ளிவாசல்

# இஸ்லாத்தில் பெண்கள்

ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலுள்ள தொடர்பை இறைத்திட்டத்தின் அடிப்படையில் இஸ்லாம் வரையறைப்படுத்துகின்றபோது, அது பெண்களுக்கு உயர் அந்தஸ்தையும், மதிப்பையும் வழங்குகிறது.

இப்படிப்பட்ட நன்மை பயக்கும் ஒழுங்குமுறை, அமைதிக்கும், ஆறுதலுக்கும், மகிழ்ச்சிக்கும், மனித இனத்தின் தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும்.

இறைவன், அவனது முழுமைபெற்ற ஞானத்தின் அடிப்படையில், உயிரினங்களை இணைகளாகப் படைத்தான் என்று தூய திருக்குர்ஆன் ஆணித்தரமாகக் கூறுகின்றது. எனவே ஆண்களும், பெண்களும் கீழ்வரும் திருக்குர்ஆன் வசனத்தின்படி ஒரே இனத்திலிருந்தே படைக்கப்பட்டுள்ளனர் என்பது தெளிவாகிறது:

“அவன் உங்களை ஓர் உயிரிலிருந்து படைத்தான். பின்னர் அவன் அதிலிருந்தே அதன் இணையைப் படைத்தான்.” **(39:7)**

“அவன் உங்கள் இனத்திலிருந்தே உங்களுக்காகத் துணைகளை உருவாக்கினான்.” **(42:12)**

“மக்களே! உங்களைத் தனித்த ஒன்றிலிருந்து படைத்து, அதிலிருந்தே அதன் இணையையும் படைத்து அவ்விரண்டிலிருந்தும் அநேக ஆண்களையும், பெண்களையும் படைத்து, பரவச் செய்த அத்தகைய இறைவனுக்கு அஞ்சுங்கள்.” **(4:2)**

"அவனே உங்களை ஓர் இனத்திலிருந்து படைத்தான். அதிலிருந்து அதன் இணையையும், அவளிடம் நிம்மதி பெறுவதற்காக உருவாக்கினான்." (7:190)

"மேலும் அவனது அடையாளங்களில் ஒன்று, அவன் உங்களிலிருந்தே உங்களுக்காக மனைவியர்களை, நீங்கள் அவர்களிடத்து மனஅமைதி பெறுவதற்காகப் படைத்து, உங்களுக்கிடையே அன்பையும், கனிவையும் அவன் ஏற்படுத்தி இருப்பதாகும். சிந்திக்கும் சமுதாயத்திற்கு நிச்சயமாக இதில் அடையாளங்கள் உள்ளன." (30:22)

இறைவனால் மனிதனுக்கு அருளப்பட்ட திறன்களும் மற்றும் சக்திகளும் ஆன்மீக அருட்கொடைகளாகும்; ஆகவே நன்மை பயக்கும் வழிகளில் உபயோகப்படுத்த வேண்டும் என்று இஸ்லாம் போதிக்கின்றது.

"அல்லாஹ் உங்களை உங்கள் தாய்மார்களின் வயிறு களிலிருந்து, நீங்கள் எதனையும் அறியாதவர்களாக இருந்த நிலையில் வெளியில் கொண்டு வந்தான். மேலும் நீங்கள் நன்றி செலுத்த வேண்டும் என்பதற்காக அவன் உங்களுக்கு காதுகளை யும், கண்களையும், உள்ளங்களையும் அருளினான்." (16:79)

இதன் பொருள் என்னவென்றால் அவற்றை உரிய நேரத்திலும், சரியான சந்தர்ப்பத்திலும் செயல்படுத்த வேண்டும்; அப்போது அவற்றின் ஆற்றல் வளர்க்கப்பட்டு அதிகரிக்கப் படுகின்றது. ஆனால் அவற்றை பொருட்படுத்தாமல் இருப்பதும் தவறாக பயன்படுத்துவதும் இறைவனின் கோபத்தை வர வழைக்கும்.

சில மார்க்கக் கோட்பாடுகள் தவறுதலாக மண வாழ்க்கையை விட துறவற வாழ்க்கையே ஆன்மீக உயர்வு தரும் என்கின்றன. இஸ்லாம் துறவறத்தை மறுப்பதுடன் அதனை கண்டிக்கவும் செய்கிறது.

திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

“அவர்கள் புதிதாக ஏற்படுத்திக் கொண்ட துறவறம் நாம் அவர்களுக்கு விதித்ததன்று. இதற்கு பதிலாக அல்லாஹ்வின் விருப்பத்தை தேடுவதையே நாம் அவர்களுக்கு விதித்தோம். அவர்கள் அதில் கவனம் செலுத்த வேண்டிய முறைப்படி, கவனம் செலுத்தவில்லை.” **(57:28)**

பெண்கள், படைப்பினங்களில் கீழ்நிலையில் உள்ளவர்கள், அவர்களுடனான தொடர்பு ஒழுக்கங்கெட்ட இழிநிலைக்கு வழிவகுக்கும் என்ற கண்ணோட்டமே இந்த துறவற வாழ்வுக்கு வித்திட்டது. கிறித்துவ மதகுருமார்கள் மனிதனின் வீழ்ச்சிக்கு முழு பொறுப்பு பெண்தான் என்று கூறி அவளை ஆன்மா அற்றவள் என்றும் சாத்தானின் கருவி என்றும் சித்தரிக்கின்றனர்.

இஸ்லாம் இதனை வன்மையாக மறுப்பதுடன் பெண்கள், ஆண்களுக்கு நிகரான ஆன்மீக அந்தஸ்திற்கு உரியவர்கள் எனப் போதிக்கிறது. அது ஆணும், பெண்ணும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்கி, பரஸ்பர தேவைகளை நிறைவேற்ற வேண்டும் எனக் கூறுகிறது. உதாரணமாக, ‘அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்’ எனக் கூறுகிறது. **(2:188)**

## ஆன்மீக சமத்துவம்

ஆன்மீக விஷயங்களில் ஆண்களுக்கு நிகரான சம உரிமை பெண்களுக்கும் உண்டு என்பதை **திருக்குர்ஆன்** வலியுறுத்திக் கூறுகிறது. உதாரணமாக,

“இறைவனுக்கு முற்றிலும் அடிபணியும் ஆண்களும் பெண்களும், நம்பிக்கை கொண்ட ஆண்களும் பெண்களும், கீழ்ப்படிந்து நடக்கும் ஆண்களும் பெண்களும், உண்மை பேசும் ஆண்களும் பெண்களும், முழுமையான பொறுமையுடைய ஆண்களும் பெண்களும், பணிவுள்ள ஆண்களும் பெண்களும், தர்மம் கொடுக்கும் ஆண்களும் பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும் பெண்களும், தம் கற்பைக் காக்கும் ஆண்களும் பெண்களும், அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறும் ஆண்களும் பெண்களும் ஆகிய இவர்கள் எல்லாருக்கும் மன்னிப்பையும் மாபெரும் நற்பலனையும் அல்லாஹ் ஆயத்தப் படுத்தி வைத்துள்ளான்.” **(33:36)**

“அல்லாஹ் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் அருள் செய்பவனாவான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.” **(33:74)**

ஆண்களுக்கு சரிசமமாக, பெண்களுக்கும் உரிய பாதுகாப்பை இஸ்லாம் வழங்குகிறது. எடுத்துக்காட்டாக,

“நம்பிக்கை கொண்ட ஆண்களையும், நம்பிக்கை கொண்ட பெண்களையும் அவர்கள் செய்யாத ஒன்றிற்காகத் துன்புறுத்துவோர் மாபெரும் பொய்யையும் மிகத் தெளிவான பாவத்தையும் சுமக்கின்றனர்.” **(33:59)**

“நம்பிக்கை கொண்ட ஆண்களையும், நம்பிக்கை கொண்ட பெண்களையும் துன்புறுத்தியதன் பின்னர் பாவமன்னிப்பு கோராதவர்களுக்கு நிச்சயமாக நரகத் தண்டனையும், எரிக்கக் கூடிய தண்டனையும் உண்டு.” **(85:11)**

ஹுதைபிய்யாவில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது: “நம்பிக்கை கொண்ட சில ஆண்களும், நம்பிக்கை கொண்ட சில பெண்களும் (மக்காவில்) இல்லாமல் இருந்திருந்தால் (நாம் உங்களைப் போரிடச் செய்திருப்போம்). ஏனெனில் நீங்கள் அவர்களை அறிய மாட்டீர்கள். மேலும் நீங்கள் அறியாமல் அவர்களை கால்களால் மிதித்து விட்டு, அதன் விளைவாக அவர்களிடமிருந்து உங்களுக்கு தீங்கு ஏற்பட்டு விடலாம். அல்லாஹ், தான் நாடியவர்களை தன் கருணையில் நுழையச் செய்வதற்காக அவன் உங்களைத் தடுத்துக் கொண்டான். அவர்கள் பிரிந்து போயிருந்தால், அவர்களுள் நிராகரித்தவர்களுக்கு நிச்சயமாக நாம் வேதனையளிக்கும் தண்டனையை வழங்கியிருப்போம்.” **(48:26)**

ஆண்களை விட பெண்கள் அதிக பாதிப்பிற்கு ஆளாகக் கூடியவர்கள் என்பதால் அவர்களுக்கு சிறப்பு பாதுகாப்பு தரப்பட்டுள்ளது.

“(தமக்கு இழைக்கப்படும் தீங்கு பற்றி) கவனமற்றவர் களாகவும் நம்பிக்கையாளர்களாகவும் விளங்கும் கற்புள்ள பெண்கள் மீது குற்றம் சுமத்துபவர்கள் இவ்வுலகிலும், மறுமையிலும் சபிக்கப்படுவர். மேலும் அவர்களுக்கு பெரும் தண்டனையும்

உண்டு. ஒரு நாளில் அவர்களது நாவுகளும், அவர்களது கைகளும், அவர்களது கால்களும், அவர்கள் செய்து கொண்டிருந்த செயல்களுக்கு எதிராகச் சாட்சி கூறும்.'' **(24:24,25)**

மறுமையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சரி சமமாக கூலி கொடுக்கப்படும்.

``நம்பிக்கையாளர் என்ற நிலையில் நற்செயல்கள் செய்பவர்கள், ஆணாயினும், பெண்ணாயினும் சொர்க்கத்தில் நுழைவார்கள். அவர்களுக்கு இம்மியளவும் அநீதி இழைக்கப்பட மாட்டாது.'' **(4: 125)**

``ஆணாயினும், பெண்ணாயினும் எவர் நற்செயல் செய்தாலும் அவர் நம்பிக்கை கொண்டவராக இருப்பின் அவருக்கு நிச்சயமாக நாம் தூய்மையான ஒரு வாழ்வினை வழங்குவோம். மேலும் நாம் அவர்களுக்கு அவர்கள் செய்ததை விட அழகான நற்பலனை வழங்குவோம்.'' **(16:98)**

``எவர் நற்செயல் செய்வாரோ அவர் ஆணாகட்டும் அல்லது பெண்ணாகட்டும் அவர் நம்பிக்கையாளராக இருப்பின் அவர் சொர்க்கத்தில் நுழைவார். அதில் அவருக்கு அளவின்றி வழங்கப்படும்.'' **(40:41)**

``நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும் தங்களுக்கிடையே ஒருவருக்கொருவர் நண்பர்களாவர். அவர்கள் நல்லவற்றைக் கொண்டு ஏவுகின்றனர்; தீயவற்றிலிருந்து தடுக்கின்றனர்; தொழுகையை நிலைநாட்டுகின்றனர்; ஸகாத்து கொடுக்கின்றனர்; அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும்

கட்டுப்பட்டு நடக்கின்றனர்; இவர்களுக்கே அல்லாஹ் கருணை காட்டுவான். நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தோனும், ஞானமுடையோனுமாவான்.''**(9:71)**

''அல்லாஹ் நம்பிக்கை கொண்ட ஆண்களுக்கும், பெண்களுக்கும் சொர்க்கத்தை வாக்களித்துள்ளான். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடும். அவர்கள் அவற்றில் என்றென்றும் வாழ்வர். மேலும் நிரந்தர சுவர்க்கங்களில் தூய்மையான இல்லங்களையும் வாக்களித்துள்ளான். மேலும் அவர்களுக்கு கிடைக்கும் அல்லாஹ்வின் திருப்தி, எல்லாவற்றையும் விட மிகப் பெரியது. இதுவே மாபெரும் வெற்றியாகும்.'' **(9: 72)**

''அவன் நம்பிக்கை கொண்ட ஆண்களையும், பெண்களை யும் கீழே ஆறுகள் ஓடுகின்றதும் அவர்கள் என்றென்றும் வாழ்ந்து வருவதுமான தோட்டங்களில் நுழையச் செய்வதற்காகவும், அவர்களது தீமைகளை அவர்களை விட்டும் அகற்றுவதற்காகவும் (அவர்களின் நம்பிக்கையை வளரச் செய்கிறான்). அல்லாஹ்விடம் அதுவே மகத்தான வெற்றியாகும்.''**(48:6)**

இறைவன் அவர்களின் வேண்டுதல்களுக்கு இவ்வாறு பதில் கொடுக்கிறான்.

''ஆணாயினும், பெண்ணாயினும் எந்த ஒரு செயல் ஆற்றுபவரின் செயலையும் நான் வீணாக்க மாட்டேன். நீங்கள் ஒருவர் மற்றொருவருடன் (தொடர்பு) உள்ளவராவீர்கள்.'' **(3:196)**

''என் அடியார்களே! இன்று உங்களுக்கு எவ்வித அச்சமுமில்லை, நீங்கள் கவலை அடையவுமாட்டீர்கள்.'' **(43:69)**

“நீங்களும் உங்கள் மனைவியர்களும் மகிழ்ச்சியடைந்தவர் களாய் சுவர்க்கத்தில் நுழையுங்கள்.” **(43:71)**

“நிச்சயமாக அந்நாளில் சுவர்க்கத்திற்குரியவர்கள் (இறை நினைவில்) மூழ்கி மகிழ்ச்சியடைவார்கள். அவர்களும் அவர்களின் இணைகளும் (இறைவனின் கருணை) நிழல்களின் மஞ்சங்களில் சாய்ந்து அமர்ந்திருப்பார்கள். அதில் அவர்களுக்கு பழங்கள் உண்டு. அவர்கள் கேட்பதெல்லாம் அவர்களுக்கு கொடுக்கப்படும்.” **(36:56–58)**

“நம்பிக்கை கொண்ட ஆண்கள், நம்பிக்கை கொண்ட பெண்கள், ஆகியோரின் ஒளி அவர்களுக்கு முன்னும் அவர்களின் வலப்பக்கங்களிலும் ஓடிக் கொண்டிருக்கும் நிலையில் நீர் அவர்களைக் காணும் நாள் (குறித்து எண்ணிப் பார்ப்பீராக. அப்போது அவர்களிடம்) இன்று உங்களுக்கு நற்செய்தி! தோட்டங்கள், அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக் கொண்டிருக்கும். அவற்றில் நீங்கள் என்றென்றும் வாழ்ந்து வருவீர்கள். இது மாபெரும் வெற்றியாகும்.” **(57:13)**

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் நம்பிக்கை கொண்ட பெண்களுக்காகவும், ஆண்களுக்காவும், மன்னிப்புக் கோரும்படி கூறப்பட்டுள்ளார்கள்.

“ஆண்கள், பெண்கள் ஆகியோருக்காக பாவ மன்னிப்பு கோருவீராக”. **(47:20)**

# செயல்முறைகளில் உள்ள வேறுபாடுகள்

இறைத் திட்டத்தின் அனைத்து அம்சங்களிலும் இறை ஞானம் இருக்கின்றது. ஆணாகட்டும் அல்லது பெண்ணாகட்டும் அவர்களின் ஆன்மீகப் படித்தரங்கள் ஒன்றேயாகும். இறைவனின் அருட்களை, கருணையைப் பெறுவதிலும் இருவரும் சமமானவர்களே. எனினும் அவர்களின் செயல்முறைகள் ஒன்று போல் இல்லை. இந்த வேற்றுமையின் காரணமாக அதற்கு ஏற்றார் போல் அவர்களின் திறன் மற்றும் ஆற்றலிலும் வேற்றுமை வைக்கப்பட்டுள்ளது. இதனைப் பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது:

"எங்கள் இறைவன் ஒவ்வொன்றிற்கும் உரிய வடிவம் அளித்து அவற்றை (சரி வர செயல் பட) வழிகாட்டியவனே ஆவான்." **(20:51)**

"அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள இயல்பைப் பின்பற்றுங்கள், அதற்கேற்பவே அவன் மனிதனை படைத்துள்ளான், அல்லாஹ்வின் படைப்பில் எந்த மாற்றமுமில்லை." **(30:31)**

பெண்ணை ஆணாக மாற்றவும், ஆணை பெண்ணாக மாற்றவும் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் வீணானவையும், அழிவைத் தரக் கூடியவையுமாகும். ஒவ்வொருவருக்கும் அவனது அல்லது அவளது இயல்புக்குப் பொருத்தமான பணி உண்டு. அதனை நேர்த்தியாக நிறைவேற்றுவதில் தான் சிறப்பும், மகிழ்ச்சியும், நிறைவும், வாழ்வில் பொலிவும் உள்ளது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள ஆற்றல்களின் வேறுபாடுகள் பற்றி சிந்திக்கின்றபோது இயற்கை அவர்களின் செயல் முறைகளில் வேற்றுமைகளை ஏற்படுத்தி இருப்பதைக் காண முடியும். எடுத்துக்காட்டாக, பெண்கள் மகப்பேறு அடையத் தகுதி பெற்றவர்களாவர்; ஆணுக்கு அந்தத் தகுதி இல்லை. அதே வேளையில் ஓர் ஆண் போர்க்கள ஆளுமைக்குத் தகுதி வாய்ந்தவராவார். அப்பணியில் ஒரு பெண் நியமிக்கப்பட்டால் அது பேரிழப்பை ஏற்படுத்தும். இதில் உயர்வு அல்லது தாழ்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. மாறாக, இது இயற்கையாக வழங்கப்பட்ட ஆற்றல் மற்றும் சரியான செயல்பாடு பற்றிய விஷயங்களாகும்.

'மகப்பேறு' என்னும் பொறுப்பைச் சரியாக நிறைவேற்றுவதில் பெண்களுக்கு சில வசதிக் குறைவுகள் இருக்கலாம்; அதிலிருந்தும் ஆண் விடுவிக்கப்பட்டுள்ளான். ஆனால் தாய்மை எனப்படும் மகத்தான, கண்ணியமிக்க மகுடம் பெண்ணுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஆண் அதற்கு ஆசைப்பட முடியாது. குழந்தைகளை சிறு வயதில் நல்ல முறையில் வளர்ப்பது தாயின் பொறுப்பில் உள்ளது. அந்த பருவத்தில் தாய்க்கு துணை நிற்பது தான் தந்தையின் பணியாகும். அந்த சமயத்தில் குழந்தையின் உள்ளுணர்வும் கூட இயல்பாக தனது பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்கு தந்தையை விட தாயை நோக்கியே திரும்புகிறது. குழந்தை தாயால் கண்டிக்கப்படும் போதும் அல்லது நல்லொழுக்க விஷயங்கள் கூறப்படும் போதும் அது தாயின் மீது கோபம் கொள்வதில்லை; அதே வேளையில் அது தந்தையின் தண்டனைக்கு ஆளாகும் போது கோபம் கொள்கிறது.

தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள இயற்கையின் அந்த பாசப்பிணைப்பு தந்தைக்கும் குழந்தைக்கும் இடையில் உள்ளதை விட பல மடங்கு நுட்பமானது. பெண் பாதிப்புக்கு ஆளாகக் கூடியவள்; அதனால் பெண்ணுக்கு ஆணின் உதவியும், பாதுகாப்பும் தேவைப்படுகிறது. ஒரு பெண் அவளது விருப்பத்திற்கு மாற்றமாக கட்டாயத்திற்குள்ளாக்கப்படலாம்; ஆனால் ஓர் ஆணை அவனது விருப்பத்திற்கு மாற்றமாக எவரும் கட்டாயப்படுத்த முடியாது.

ஒரு துணைவியாகவும், ஒரு தாயாகவும் இருந்து அன்றாட முக்கிய பணிகளை ஆற்றும் இடம், ஒரு பெண்ணுக்கு அவளின் இல்லமாகும். அதே நேரத்தில் குடும்ப பராமரிப்பு காரணமாக ஓர் ஆணின் பணிகள் மற்றும் செயல்பாடுகள் வெளி உலகைச் சார்ந்துள்ளன.

ஞானம் மற்றும் நன்மையின் அடிப்படையில் இயங்கும் ஒரு சமூக செயல்திட்டம் இவ்விருவருக்குமிடையில் சமநிலையை, ஒற்றுமையை நிலைபெறச் செய்கிறது. இஸ்லாம் மட்டுமே அதனை செய்வதாகப் பறைசாற்றுகிறது.

## திருமணம்

திருமணம் செய்வதன் தலையாய நோக்கமாக இஸ்லாம் எடுத்துரைப்பது கற்புடைமை, திருப்தி கொள்ளுதல், மனநிறைவு அடைதல், தமது இனப்பெருக்கம் ஆகியவற்றின் மூலமாக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாகும். உதாரணமாக, உண்மையான இறை நல்லடியார்களின் குண இயல்புகள் பற்றி 'தொழுகையில் அவர்கள் கண்டிப்புடன் பணிவோடு நிற்பார்கள்; எல்லா வீணான செயல்களிலிருந்தும் தவிர்ந்திருப்பார்கள்; ஸக்காத்தை நிறைவேற்றுவார்கள்; வாக்குறுதியை, உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் விழிப்புடன் இருப்பார்கள்' என்பதுடன் 'மண வாழ்க்கை மூலமாக அவர்கள் தங்கள் கற்பைப் பாதுகாத்துக் கொள்வார்கள்' என்றும் வலியுறுத்திக் கூறுகிறது.

"திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: இவர்கள்தான் (ஃபிர்தவ்ஸ்) ஆகிய சுவர்க்கத்தை உரிமையாக்கிக் கொள்பவர் களாவர். அவர்கள் அதில் என்றென்றும் வாழ்ந்து வருவர்." **(23:12)**

மேலும் ஒரு வழிகாட்டல் இவ்வாறு வருகிறது: "உங்களிலுள்ள விதவைகளையும், உங்கள் ஆண் அடிமைகள், பெண் அடிமைகள் ஆகியவர்களுள் நல்லவர்களையும் மண முடித்துக் கொடுங்கள். அவர்கள் ஏழைகளாக இருந்தால் அல்லாஹ் தன் அருளால் அவர்களை செல்வந்தர்களாக்கி வைப்பான். அல்லாஹ் வளமிக்கோனும் நன்று அறிபவனுமாவான்." **(24:33)**

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: "இல்லற வாழ்க்கையே எமது வழியாகும்; எவர் எம் வழியிலிருந்து முகம் திருப்புவாரோ அவர் எம்மைச் சார்ந்தவர்

அல்லர்.'' (சுனன் இப்னி மாஜா, கிதாபுன் நிகாஹ், பாபு மாஜாஅ ஃபீ ஃபழ்லின் நிகாஹ், ஹதீஸ் எண்.1846)

துரதிர்ஷ்டவசமாக, மேலை நாடுகளில் கற்புடைமை ஒரு நல்லொழுக்கமாகக் கருதப்படுவதில்லை; மாறாக, அது பழித்துரைக்கப்படுகிறது. பிறருக்கு காட்டுவதற்காக இணைந்து வாழ்வது, மண முடிக்காமல் ஆண், பெண் நட்பு கொள்வது நடைமுறையாகி விட்டது. மணவாழ்வுக்கு முன்பும் பின்பும் உள்ள தவறான ஒழுக்கம், சிற்றின்ப தொடர்பு ஆகியவைதான் வாழ்வின் நோக்கமாகக் கருதப்படுகிறது. பெண்கள் எந்த அளவுக்கு மட்டமாக மதிக்கப்படுகிறார்கள் என்றால் அவர்கள் பாலுணர்வை அனுபவிப்பதற்கான ஓர் உபகரணமாக சித்தரிக்கப்படுகிறார்கள்.

கணவன், மனைவிக்கு இடையிலான தொடர்பு கருணையின் அம்சமாக இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ளது.

''நீங்கள் அவர்களுடன் நல்ல முறையில் (கண்ணியமாக) நடந்து கொள்ளுங்கள். மேலும் நீங்கள் அவர்களை வெறுக்கின்றீர்கள் என்றால் நீங்கள் வெறுக்கும் ஒன்றில் அல்லாஹ் ஏராளமான நன்மையை வைத்திருக்கக் கூடும்.'' (4:20)

மணவாழ்க்கையில் இருவருக்கும் உள்ள உறவு குறித்து ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: ''நீங்கள் ஒன்று சேர்கின்றபோது இறைவனிடம் இவ்வாறு வேண்டுங்கள்; ''அல்லாஹ்வே! ஷய்த்தானின் தீங்கிலிருந்தும் எங்களை காப்பாயாக. நீ எங்களுக்கு வழங்கியதிலிருந்து ஷய்த்தானை தூரமாக்குவாயாக.'' (சஹீஹுல் புகாரி, கிதாபுத் தஃவாத், பாபு மா யகூலு இதா அதா அஹ்லஹு, ஹதீஸ் எண்.6388)

ஏற்கெனவே குறிப்பிட்டபடி, திருக்குர்ஆன் கணவன் மற்றும் மனைவியை ஒருவர் மற்றவருக்கு ஆடை எனக் கூறுகிறது. **(2:188)**

அதாவது ஒருவர் மற்றவருக்கு அரணாகவும், கண்ணியத்திற்குரியவராகவும், அணிகலனாகவும் திகழ்கின்றார். இஸ்லாம் கூறும் மணவாழ்க்கை, வெறும் சரீர இச்சைகளை விட்டகன்று, நல்லொழுக்கத்தின் உயர் நிலையை எய்தவும், உயர் ஆன்மீக தரத்தை அடையவும் துணை நிற்கிறது. தூய திருக்குர்ஆனில் காணப்படும் பின்வரும் வழிகாட்டுதல் களிலிருந்தும், கட்டளைகளிலிருந்தும் இது தெளிவாக விளக்கப்பட்டுள்ளது:

“அவர்கள் உம்மிடம் மாதவிடாய் குறித்து வினவுகின்றனர். நீர் கூறுவீராக: அது ஓர் இயற்கை உபாதையாகும். எனவே மாதவிடாயின் நாட்களில் மனைவியரை விட்டு நீங்கள் விலகி இருங்கள். அவர்கள் தூய்மையடையும் வரை அவர்களிடம் செல்லாதீர்கள். பின்னர் அவர்கள் குளித்து தூய்மை அடைந்து விட்டால் அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிட்டபடி அவர்களிடத்துச் செல்லுங்கள். தன் பக்கம் திரும்புபவர்களை அல்லாஹ் நிச்சயமாக நேசிக்கின்றான். தூய்மையாக இருப்பவர்களையும் அல்லாஹ் நேசிக்கின்றான்.” **(2:223)**

“உங்கள் மனைவிகள் உங்களுக்கு விளைநிலமாக விளங்குகின்றனர். எனவே நீங்கள் விரும்புகின்றபடி, உங்கள் விளைநிலத்திற்குச் செல்லுங்கள். உங்களுக்காக நல்லவற்றை முன்னே அனுப்பி வையுங்கள். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்.

நீங்கள் அவனை சந்திப்பீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டவர்களுக்கு நீர் நற்செய்தி கூறுவீராக.'' **(2:224)**

எனவே, மனைவி குழந்தை பெற்றுக் கொள்வதில் பாதிப்பை உருவாக்கும் எந்த செயல்பாட்டையும் இஸ்லாம் அனுமதிக்க வில்லை. தூய்மை மற்றும் (தக்வா எனும்) இறையச்சத்தை அதிகரிக்கச் செய்யும் நல்லொழுக்கத்தை எப்போதும் மனதில் கொள்ள வேண்டும்.

நல்லடியார்களுக்கு திருக்குர்ஆன் கற்றுத் தரும் ஒரு பிரார்த்தனை இதுவாகும்:

``எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சிமிக்கதாக ஆக்குவாயாக. மேலும் எங்களை இறையச்சம் உடையவர்களுக்கு முதன்மையானவராக ஆக்குவாயாக.'' **(25:75)**

## "கணவன், மனைவி" - பொறுப்புகளும் கடமைகளும்

இஸ்லாமிய கோட்பாட்டின்படி, திருமணம் என்பது இருவரும் ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசை செய்து தமது வாழ்வுரிமையை நிலைபெறச் செய்யும் ஓர் உடன்படிக்கையாகும். அதன் நம்பகத்தன்மைக்கான ஆதாரம், இருதரப்பினரும் முழு மனதுடன் தங்களது சம்மதத்தை பிரகடனப்படுத்துவது, மணப்பெண்ணின் வலி (காப்பாளர்) ஒப்புதல் தெரிவிப்பது, அவரது கடமை மணப்பெண்ணின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பது மேலும் அதனை பாதுகாப்பது, கணவன் தம் வருமானத்திற்கு ஏற்ப ஒரு தொகையை மனைவிக்கு கொடுப்பது அதுவே மஹர் ஆகும். இதனை மணப்பெண்ணின் பெற்றோர் அல்லது காப்பாளர் கொடுக்கும் கட்டாய வரதட்சணை எனக் கருதி விடாதீர்கள்.

திருமணம் செய்ய தடுக்கப்பட்டவர்கள் குறித்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. "விலக்கப்பட்ட இவர்கள் நீங்கலாக ஏனையவர்கள் உங்களுக்கு ஆகுமானவர்கள். அவர்களை விபச்சார முறையிலன்றி, உங்கள் செல்வத்தின் மூலம் மஹரைக் கொடுத்து விடுங்கள். 'மஹர்' தொகையை குறிப்பிட்ட பின்னர், அது குறித்து நீங்கள் உங்களுக்குள் உடன்பாடு செய்து கொள்வதில் எந்தக் குற்றமுமில்லை. நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனும், நுண்ணிய ஞானமுடையவனும் ஆவான்." **(4:25)**

கணவன் மனைவிக்கிடையே ஒருவருக்கொருவர் ஆற்ற வேண்டிய கடமைகள் இருப்பினும், குடும்பத் தலைவர் என்ற முறையில் அவருக்கு மனைவி மக்களின் தேவைகளை

நிறைவேற்றும் பொறுப்பு உள்ளது. குடும்பத்தை வழிநடத்தும் விஷயங்களில் ஏதும் கருத்து வேற்றுமை உண்டானால், கணவனின் வார்த்தையே இறுதியானதாக இருக்கும்; அவ்வாறு இல்லாவிடில் விஷயங்கள் கட்டுப்பாட்டை இழந்து, முடிவில் குடும்பம் நாசத்தை சந்திக்க நேரிடும்.

“பெண்களாகிய அவர்கள் மீது சில பொறுப்புகள் உள்ளது போன்று நியாய முறைப்படி அவர்களுக்கு சில உரிமைகளும் உள்ளன. ஆயினும் அவர்களை விட ஆடவர்களுக்கு ஒருவித உயர்வு உள்ளது. அல்லாஹ் வல்லோனும் நுண்ணறிவுடையோனும் ஆவான்.” **(2:229)**

பெண்களுக்கு உடல்ரீதியிலான பலவீனம், மென்மை மற்றும் பாதுகாப்பற்ற சூழல் இருப்பதன் காரணமாக, ஆண்கள் அவர்களின் காப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

“ஆண்கள் பெண்களின் காப்பாளர்களாக இருக்கின்றனர். ஏனெனில் அவர்களில் சிலரை, சிலரை விட அல்லாஹ் மேன்மையாக்கியுள்ளான். மேலும் அவர்கள் தங்கள் பொருட்களைப் பெண்களுக்காக செலவு செய்கின்றனர். எனவே நல்ல பெண்கள் கட்டுப்பட்டு நடப்பவர்களும், அல்லாஹ் பாதுகாத்துள்ள தங்கள் கணவரின் இரகசியங்களைக் காப்பவர்களும் ஆவர்.” **(4:35)**

மனைவி தொடர்ந்து அடம்பிடித்தால், அதனால் வீட்டின் அமைதிக்கு, ஒற்றுமைக்கு குந்தகம் ஏற்பட்டால், கணவர் மனைவியை கண்டிக்க வேண்டும். அதிலும் எவ்வித நற்பலனும் இல்லை என்றால் அவரை தற்காலிகமாக படுக்கையிலிருந்து

விலக்கி வைக்க வேண்டும். அவரை திருத்த கடைசியில் வேறு வழியில்லை என்றால் லேசான தண்டனை கொடுங்கள்.'' **(4:35)**

''தனது கணவன் தன்னைக் கொடுமைப்படுத்துவான் என்றோ, புறக்கணித்து விடுவான் என்றோ, எந்தப் பெண்ணாவது அஞ்சினால் அவர்கள் இருவரும் தக்க முறையில் தங்களுக் கிடையில் சமாதானம் செய்து கொள்வதில் அவர்களிருவர் மீதும் எந்தக் குற்றமும் இல்லை. சமாதானம் ஏற்படுத்துவதே சிறந்தது. மக்களின் இயல்பில் கருமித்தனம் உருவாக்கப்பட்டுள்ளது. நீங்கள் நற்செயல் செய்து இறையச்சத்தை மேற்கொண்டால், நீங்கள் செய்வதை அல்லாஹ் நிச்சயமாக தெரிந்து கொள்வான்.'' **(4:129)**

இருவரும் ஒருவருக்கொருவர் பேசி மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்துவது கடினம் எனத் தெரிய வந்தால், அதற்காக நடுவர்களின் உதவியை நாட வேண்டும்.

திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: ''கணவன் மனைவி ஆகிய அவ்விருவருக்கிடையே பிரிவு ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சினால், அவருடைய குடும்பத்தினரிலிருந்து நடுவர் ஒருவரையும், அவளுடைய குடும்பத்தினரிலிருந்து நடுவர் ஒருவரையும் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அவ்விருவரும் இணக்கத்தை விரும்பினால் அவ்விருவருக்கிடையே அல்லாஹ் ஒற்றுமையை உருவாக்கி விடுவான். நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிபவனும் நன்கு உணர்ந்தவனுமாவான்.'' **(4:36)**

## மணவிலக்கு

மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் யாவும் நற்பலனைத் தராத நிலையில்,திருமண பந்தத்தை முறிப்பது மட்டுமே விடுதலைக்கான வழியாக உள்ளது. இருந்தபோதிலும், இஸ்லாம் 'மணவிலக்கை' விரும்பத்தக்க ஒன்றாகக் கொள்ளவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். தூய நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியுள்ளார்கள்: "அனுமதிக்கப்பட்ட எல்லாவற்றிலும், அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் வெறுக்கத்தக்கது மணவிலக்காகும்." (சுனன் இப்னி மாஜா, கிதாபுத் தலாக், பாபு ஹத்தஸனா ஸுவைதுப்னு ஸயீதின், ஹதீஸ் எண்.2018)

கணவனோ, அல்லது மனைவியோ மணவிலக்குக்கான நடவடிக்கையைத் துவக்கலாம்; எனினும் மனைவி சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவரது உரிமைகள் முழுமையாக பாதுகாக்கப்படும் அளவில் நீதியுடன் கையாள வேண்டும். கருத்து வேற்றுமைகள் உருவாகி, மீண்டும் இணக்கத்திற்கான சூழல் இல்லாமல் போனால், கணவன் மனைவியிடமிருந்து தவிர்ந்து இருக்க உறுதி எடுத்தால், இந்நிலை நான்கு மாதத்திற்குள் தீர்க்கப்பட வேண்டும்.

"தங்கள் மனைவியர்களிடம் (அவர்களை விட்டும் விலகி யிருக்க) சத்தியம் செய்கின்றவர் நான்கு மாதங்கள் மட்டும் எதிர்பார்க்கலாம். பின்னர் (இக்கால அளவுக்குள் சமாதானத்தின் பக்கம்) அவர்கள் திரும்பி வந்தால், நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்." (2:227)

“அவர்கள் மணவிலக்கு கொடுக்க முடிவெடுத்து விட்டால் நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பவனும், நன்கு அறிபவனுமாவான்.” **(2:228)**

மணவிலக்கு குறித்து பல ஒழுங்கு முறையின் அம்சங்கள் உள்ளன. அவை மணவிலக்கை சாதாரணமானதாகக் கருதியோ, உணர்ச்சிவசப்பட்டோ, அல்லது கடுங்கோபத்தில் இருக்கும் போதோ கொடுக்க கூடாது. நன்றாக ஆழ்ந்து சிந்தித்து இதன் விளைவு இரு தரப்பிலும், குழந்தைகளுக்கும் எவ்வாறிருக்கும் என்பதை பரிசீலித்து, வெளிப்படையாக மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு அதற்கான நடைமுறை வகுக்கப்படும் போது, இருசாராருக்கும், ரத்து செய்ய முடியாத மணவிலக்கு ஏற்படுவதற்கு முன்பாக, நிதானமாக சிந்திப்பதற்கும், மீண்டும் இணக்கம் ஏற்படுவதற்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

(மீண்டும் இணையத்தக்க) மணவிலக்கு இரு முறைகளேயாகும். பின்னர் தக்க முறையில் மணவிலக்கு பெற்ற பெண்களைத் தடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். அல்லது நல்ல முறையில் அனுப்பி வைக்க வேண்டும்.

அல்லாஹ்வால் வரையறுக்கப்பட்ட வரம்புகளை அவ்விருவராலும் நிலைநிறுத்த முடியாது என அவர்கள் அஞ்சினாலன்றி, நீங்கள் ஏற்கெனவே அவர்களுக்கு வழங்கியதிலிருந்து எப்பொருளையும் திரும்பப் பெறுதல் உங்களுக்கு ஆகாது.

அவ்விருவராலும் அல்லாஹ்வின் வரையறுக்கப்பட்ட வரம்புகளை நிலைநிறுத்த முடியாது என்ற அச்சம் உங்களுக்கு இருக்குமாயின், அவள் தன்னை விடுவிக்க ஈடாகக் கொடுப்பதில் அவ்விருவரின் மீதும் எந்தக் குற்றமுமில்லை. இவை அல்லாஹ்வின் வரையறுக்கப்பட்ட வரம்புகளாகும். எனவே நீங்கள் அவற்றை மீறாதீர்கள். அல்லாஹ்வின் வரம்புகளை மீறுபவர் அநீதியிழைப்பவராவர். **(2:230)**

அவசர கோலத்தில் கொடுக்கப்படும் மணவிலக்கை தடை செய்யும் வசனம் இதுவாகும்: பிறகு இரு தலாக்குகள் நிகழ்ந்த பின்னரும் மூன்றாவதாக அவன் அவளுக்கு மணவிலக்கு கொடுத்து விட்டால், அவள் அவனல்லாத மற்றொரு கணவனுடன் செல்லும் வரை அவள் அவனுக்கு ஆகுமானவளாக மாட்டாள். ஆனால் அவனும் அவளுக்கு மணவிலக்கு கொடுத்து விட்டால், அவ்விருவரும் அல்லாஹ்வின் வரம்புகளை தங்களால் நிலைநிறுத்த முடியும் என்ற உறுதி இருந்தால் ஒருவர் மற்றொருவரிடம் திருமணம் மூலம் சேர்ந்து கொள்வதில் அவர்கள் இருவர் மீது எந்தக் குற்றமுமில்லை. இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். இவற்றை அவன் அறிவுடைய மக்களுக்கு விளக்கிக் கூறுகின்றான். **(2:231)**

நீங்கள் பெண்களுக்கு தலாக் கொடுத்து அவர்கள் தம்முடைய தவணையின் இறுதி எல்லையினை அடைந்து விட்டார்களாயின் நீங்கள் அவர்களை தக்க முறையில் தங்க வைத்துக் கொள்ளுங்கள். அல்லது நன்முறையில் அவர்களை அனுப்பி வையுங்கள். அநீதியிழைப்பதற்காக அவர்களை

துன்புறுத்தி தடுத்து வைத்துக் கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்பவன் தனக்கே அநீதியிழைத்துக் கொண்டான். நீங்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏளனத்திற்குரியதாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய அருட்கொடையையும், அவன் உங்களுக்கு இறக்கிய வேதத்தையும் ஞானத்தையும் எண்ணிப் பாருங்கள். இதன் மூலம் அவன் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றான். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிவான் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள். **(2:232)**

நீங்கள் பெண்களுக்கு மணவிலக்கு கொடுத்து அவர்கள் தங்கள் தவணையை நிறைவு செய்து விட்டால், அவர்கள் நல்ல முறையில் ஒருவரையொருவர் விரும்பினால் தம்முடைய கணவர்களை மணந்து கொள்வதிலிருந்து நீங்கள் அவர்களை தடை செய்யாதீர்கள். உங்களுள் அல்லாஹ்வையும் இறுதி நாளையும் நம்புபவர்களுக்கு இது அறிவுரையாகும். இது உங்களுக்கு மிக்க அருளையும், மிக்க தூய்மையையும் வழங்கக் கூடியதாகும். அல்லாஹ் அறிகிறான். நீங்களோ அறியமாட்டீர்கள். **(2:233)**

மணவிலக்கு கொடுக்கப்பட்ட பெண்கள் மூன்று மாதவிடாய் வரை தம்மைத் தாமே தடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் அல்லாஹ்விடத்தும், மறுமை நாளிடத்தும் நம்பிக்கை கொண்டவர்களாயின் அல்லாஹ் அவர்களின் கருப்பைகளில் உருவாகியுள்ளதை மறைப்பது அவர்களுக்கு ஆகாது. அவர்களின் கணவர்கள் தமக்கிடையே இணக்கத்தை

விரும்பினால் அவர்கள் குறிப்பிடப்பட்ட காலமாகிய அதற்குள் அவர்களை இல்லற வாழ்க்கைக்கு திரும்ப அழைத்துக் கொள்ள உரிமை பெற்றவர்களாவர். பெண்களாகிய அவர்கள் மீது சில பொறுப்புகள் உள்ளது போன்று, நியாய முறைப்படி அவர்களுக்கு சில உரிமைகளும் உள்ளன. ஆயினும் அவர்களை விட ஆடவர்களுக்கு ஒருவித உயர்வு உள்ளது. அல்லாஹ் வல்லோனும் நுண்ணறிவுடையவனுமாவான். **(2:229)**

திரும்பப் பெற்றுக் கொள்ளக் கூடிய மணவிலக்கை அறிவிப்பு செய்த பின் கணவனும், மனைவியும் இணைந்து விட்டால், அந்த அறிவிப்பு செல்லாததாக ஆகி விடும்.

உங்களுள் எவர் மரணமடைந்து தமக்குப் பின்னால் மனைவியரை விட்டுச் செல்கின்றனரோ அவருடைய மனைவியர்கள் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் காத்திருக்க வேண்டும். பின்னர் அவர்கள் தங்களுடைய தவணையை நிறைவு செய்து விட்டால் அவர்கள் தம் பொருட்டு நல்ல முறையில் எதைச் செய்தாலும் அதனால் உங்கள் மீது எந்தக் குற்றமுமில்லை. நீங்கள் செய்வதை அல்லாஹ் தெரிந்து கொள்ளக் கூடியவனே ஆவான். **(2:235)**

இத்தகு பெண்களை மணந்து கொள்வதற்கான விண்ணப்பம் சம்பந்தமான எந்த செய்தியினையும் சைகை மூலம் நீங்கள் அவர்களிடம் கூறுவதிலோ உங்கள் உள்ளங்களில் வைத்துக் கொள்வதிலோ உங்கள் மீது எந்தக் குற்றமுமில்லை. நீங்கள் கட்டாயம் அவர்களை நினைப்பீர்கள் என்பதை அல்லாஹ் அறிவான். எனினும் நீங்கள் அவர்களிடம் ஏதாவதொரு நல்லதை

கூறிக் கொள்ளலாமே தவிர நீங்கள் அவர்களுடன் இரகசியமாக எந்த உடன்படிக்கையும் செய்து கொள்ளக் கூடாது. ‘இத்தா’விற்கான குறிப்பிடப்பட்டுள்ள காலம் முடிவதற்கு முன்னால், நீங்கள் திருமண பந்தத்திற்கான முடிவை எடுக்காதீர்கள். உங்கள் உள்ளங்களில் உள்ளதை அல்லாஹ் அறிவான் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். எனவே நீங்கள் அதற்கு பயந்து கொள்ளுங்கள். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் பொறுத்துக் கொள்பவனுமாவான் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். **(2:236)**

உங்களுள் எவர் மரணமடைந்து மனைவியரை விட்டுச் செல்கின்றனரோ அவர்கள் தங்கள் மனைவிகளுக்கு ஓராண்டு வரை பயன் அளிப்பதற்காக அதாவது அவர்களை இல்லங்களிலிருந்து வெளியேற்றாமல் இருப்பதற்காக வஸிய்யத் என்னும் இறுதி விருப்பம் செய்ய வேண்டும். ஆனால் அப்பெண்கள் தாமாகவே சென்று விடுவார்களாயின் அவர்கள் தமக்காக விரும்பத்தக்கதை செய்வதில் உங்கள் மீது குற்றமில்லை. அல்லாஹ் வல்லவனும் நுண்ணறிவுடையவனு மாவான். **(2:241)**

மணவிலக்கு கொடுக்கப்பட்ட பெண்களுக்கு நியாயமான முறையில் வாழ்க்கைக்குரிய சில பொருட்களைக் கொடுப்பது அவசியமாகும். இறையச்சமுடையவர்களுக்கு இது கட்டாயமாகும். **(2:242)**

நீங்கள் பெண்களைத் தொடாமலோ அவர்களுக்கு மஹரை முடிவு செய்யாமலோ இருக்கும்போது நீங்கள்

அவர்களுக்கு மணவிலக்கு கொடுத்தால் அதனால் உங்கள் மீது குற்றமில்லை. நீங்கள் நன்முறையில் வாழ்க்கைக்கு வேண்டியவற்றுள் சிறிது வழங்குங்கள். செல்வந்தர் தமது தகுதிக்கேற்பவும், ஏழை தமது தகுதிக்கேற்பவும் வழங்க வேண்டும். நல்லவர்களுக்கு இது கடமையாகும். **(2:237)**

நீங்கள் அவர்களுக்கு மஹரை முடிவு செய்து விட்டு அவர்களைத் தொடுவதற்கு முன்னரே அவர்களுக்கு மணவிலக்கு கொடுத்து விட்டால் பெண்களாகிய அவர்கள் மன்னித்தாலன்றி அல்லது எவரது கையில் திருமண பந்தம் உள்ளதோ அவர் மன்னித்தாலன்றி நீங்கள் முடிவு செய்த மஹரில் சரிபாதியைக் கொடுக்க வேண்டும். நீங்கள் மன்னித்து விடுவதோ இறையச்சத்திற்கு மிகவும் நெருங்கியதாகும். நீங்கள் ஒருவருக் கொருவர் நன்மை செய்ய மறந்து விட வேண்டாம். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதைப் பார்க்கின்றான். **(2:238)**

தாய்மார்கள் தம் குழந்தைகளுக்கு இரண்டு ஆண்டுகள் முழுவதும் பாலூட்ட வேண்டும். இது பாலூட்ட விரும்புகின்றவர் களுக்கு உரியதாகும். தாய்மார்களுக்கு அவர்களுக்குரிய நியாயமான உணவு, உடை ஆகியவற்றிற்கான பொறுப்பு குழந்தையின் தந்தையைச் சாரும். எந்த மனிதன் மீதும் அவனுடைய தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பு சுமத்தப்பட மாட்டாது. எந்த தாயையும் தன் குழந்தையின் காரணமாக தந்தை துன்புறுத்தக் கூடாது. எந்த தந்தையையும் தன் குழந்தையினால் தாய் துன்புறுத்தக் கூடாது. அவ்வாறே செய்வது வாரிசுக்கும் கடமையாக உள்ளது. அவ்விருவரும் தமக்குள் உடன்பட்டு கலந்து

ஆலோசனை செய்து பாலூட்டுவதை நிறுத்திக் கொள்ள விரும்பினால் அதனால் எந்தக் குற்றமுமில்லை. நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு செவிலித்தாய் மூலம் பாலூட்ட விரும்பி நீங்கள் வழங்க ஒப்புக் கொண்டதனை நியாயமான முறையில் நிறைவேற்றினால் உங்கள் மீது எந்தக் குற்றமுமில்லை. அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நீங்கள் செய்வதனை நிச்சயமாக அல்லாஹ் பார்க்கின்றான் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள். **(2:234)**

மேலே கூறப்பட்ட கருத்துக்களின் சுருக்கம்: நபியே! (அதாவது அவரை பின்பற்றுபவர்களே!) நீங்கள் பெண்களுக்கு மணவிலக்கு கொடுக்கும்போது, குறிப்பிட்ட காலவரையறைக்கு ஏற்ப அவர்களுக்கு மணவிலக்கு கொடுத்து அந்த காலவரையறையைக் கணித்துக் கொள்ளுங்கள். உங்கள் இறைவனாகிய அல்லாஹ்வுக்கு அஞ்சி நடங்கள். அவர்களின் வீடுகளிலிருந்து அவர்களை வெளியேற்றாதீர்கள். அவர்கள் பகிரங்கமான ஓர் அருவெறுக்கத்தக்க செயலைச் செய்தாலன்றி, அவர்கள் தாமாகவும் வெளியேற வேண்டாம். இவை அல்லாஹ்வின் வரையறைகளாகும். அல்லாஹ்வின் வரையறைகளை மீறுபவர் நிச்சயமாக தமக்கே அநீதியிழைத்துக் கொள்கின்றார். இதன் பின்னர் ஒருவேளை அல்லாஹ் ஏதேனும் புதிது ஒன்றை ஏற்படுத்தி விடலாம். **(65:2)**

பின்னர் அவர்கள் தங்களுக்குரிய காலக்கெடுவின் இறுதி எல்லையை அடைந்து விடும்போது அவர்களைப் பொருத்தமான முறையில் தடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அல்லது

பொருத்தமான முறையில் அவர்களைப் போகவிட்டு விடுங்கள். உங்களுள் நேர்மையான இருவரை சாட்சியாக நியமித்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்காக உண்மையான சாட்சி கூறுங்கள். அல்லாஹ்விடத்து நம்பிக்கை கொள்பவருக்கு இவ்வாறு அறிவுரை வழங்கப்படுகிறது. அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவன் ஏதேனும் ஒரு வழியை ஏற்படுத்துவான். **(65:3)**

உங்கள் பெண்களுள் மாதவிடாய் குறித்து நம்பிக்கை இழந்துவிட்டவர்கள் காலக்கெடு தொடர்பாக, நீங்கள் ஐயப்பாட்டிற்குள்ளானால் அவர்களுக்குரிய காலக்கெடு மூன்று மாதங்களாகும். மாதவிடாய் வராதவர்களுக்கும் அவ்வாறே ஆகும். கருத்தரித்தவர்களுக்குரிய காலக்கெடு அவர்கள் தங்கள் சுமையை விடுவிக்கும் வரையாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சி நடப்பவருக்கு அவரது விவகாரங்களை அவன் எளிதாக்கி விடுவான். **(65:5)**

மணவிலக்கு கொடுக்கப்பட்ட பெண்களை அவர்களுக்குரிய காலக்கெடுவின் போது நீங்கள் இருந்து வரும் வீடுகளிலேயே அவர்களையும் இருக்கச் செய்யுங்கள். நீங்கள் அவர்களுக்கு கொடுமைகளை உருவாக்கும் பொருட்டு வேண்டுமென்றே அவர்களை துன்புறுத்தாதீர்கள். அவர்கள் கருத்தரித்தவர்களாக இருந்தால், அவர்கள் தங்கள் சுமையை விடுவிக்கும் வரை அவர்களுக்காக செலவு செய்யுங்கள். அவர்கள் உங்களுக்காக குழந்தைகளுக்கு பாலூட்டினால் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பிரதிபலனை அவர்களுக்கு கொடுங்கள்.

உங்களுக்கிடையே பொருத்தமான முறையில் கலந்தாலோசனை செய்து கொள்ளுங்கள். ஆனால் ஒருவரால் மற்றொருவர் சங்கடத்திற்குள்ளாக வேண்டியதிருந்தால் குழந்தைக்கு வேறொருத்தி பாலூட்டட்டும். **(65:7)**

செல்வந்தர் தமது செல்வத்திற்கேற்ப செலவு செய்ய வேண்டும்; தமது வாழ்விற்குரிய பொருட்கள் குறைவாகக் கொடுக்கப்பட்டவர், அல்லாஹ் அவருக்கு வழங்கியதிலிருந்து செலவு செய்ய வேண்டும். அல்லாஹ் எந்த ஆன்மாவுக்கும் அவன் அதற்கு வழங்கியிருப்பதற்கு அப்பாற்பட்ட சுமையைச் சுமத்துவதில்லை. அல்லாஹ் விரைவில் கஷ்டத்திற்கு பின்னர் வசதியை உண்டாக்குவான். **(65:8)**

# பலதாரமணம்

பல பெண்களை மணமுடிப்பது எந்த மார்க்கத்திலும் இறை கட்டளையின் அடிப்படையில் தடை செய்யப்படவில்லை; மேலும் இஸ்லாத்தை தவிர வேறெந்த மார்க்கத்திலும் மனைவிமார்களின் எண்ணிக்கைக்கு வரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. இஸ்லாம் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிமார்களை அனுமதிக்கின்ற அதே வேளையில் அவர்களின் எண்ணிக்கையை 'நான்கு' என்று விதித்துள்ளது. அந்த அனுமதியும் கூட மனைவிமார்களை நீங்கள் எந்த அளவுக்கு நீதியுடன் நிர்வகிக்கின்றீர்கள் என்பதை பொருத்ததாக இருக்கும்.

அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: "ஆனால் இதில் உங்களால் நீதியுடன் நடக்க இயலாது என நீங்கள் அஞ்சினால் ஒருத்தியை அல்லது உங்கள் வலக்கரங்களிலுள்ளவளை மணந்து கொள்ளுங்கள்." (4:4)

ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர்கள் இருந்தால் அவர்களோடு நீதியுடன் நடந்து கொள்ளும் முறை என்னவெனில், அவர்களை பராமரிப்பதில் சமநிலை, வாழ்வுக்குத் தேவையான வசதிகளை வழங்குதலில் சமநிலை, குடும்ப நெருக்கத்தில் சமநிலை ஆகியவை இருத்தல் வேண்டும். ஏனெனில் இவையே சரி சமமான பங்கீட்டை பாதிக்கும் அம்சங்களாக உள்ளன. தன்னுடைய கட்டுப்பாட்டில் இல்லாத விஷயங்களில், சமநிலை குறித்த கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக, உணர்வுப்பூர்வமான பற்று, நெருக்கம் ஆகியவை தவிர்க்கப் பட்டிருப்பதை கீழ்வரும் இந்த பொதுவான சட்டம் விளக்குகிறது:

“அல்லாஹ் எவருக்கும் அவரது தகுதிக்கு அப்பாற்பட்ட பொறுப்பை சுமத்துவதில்லை.” **(2:287)**

மேலும் ஒரு குறிப்பான விளக்கம்: “நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும் மனைவியருக்கிடையில் சமநிலையில் நடந்து கொள்ள உங்களால் ஒருபோதும் இயலாது என்றாலும் ஒருத்தியின் பக்கமே முற்றிலும் சாய்ந்து மற்றொருத்தியை அந்தரத்தில் தொங்க விடாதீர்கள். நீங்கள் உங்களை திருத்திக் கொள்ளவும், இறையச்சத்தை மேற்கொள்ளவும் செய்தால் நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.” **(4:130)**

தற்கால சில முஸ்லிம் எழுத்தாளர்கள், மேலைநாட்டவர்களை திருப்திப்படுத்தும் வகையில், மனக்குழப்பத்தாலும், பேரார்வத்தாலும் பலதாரமணம் மனைவியருக்கிடையில் சமநிலையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கப்பட்டதாகும் எனக் கூறி இவ்வசனத்தை **(4:4)** சர்ச்சைக்கு இலக்காக்குகின்றனர். மேலும் சமநிலையில் நடந்து கொள்ள உங்களால் ஒருபோதும் இயலாது **(4:130)** என்ற வசனத்தின்படி அனுமதி அளிக்கப்பட்டது பின்னர் ரத்து செய்யப்பட்டு விட்டது எனக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட மாறுபட்ட கருத்துரைகள் முற்றிலும் தவறானவை; எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கவையல்ல. திருக்குர்ஆன் வசனம் மிகத் தெளிவாக பலதாரமணத்தை தொடர, ஆழ்ந்து பரிசீலனை செய்யுமாறு கூறுகிறது. அதுமட்டுமல்லாது, திருமறையின் **4:130** வசனத்தை குறித்து தூய நபி (ஸல்) அவர்களோ அவர்களது

தோழர்களோ திருக்குர்ஆன் வசனம் 4:4 –ல் கூறப்பட்ட அனுமதி ரத்து செய்யப் பட்டு விட்டதாக தங்களின் கருத்துரையில் குறிப்பிடவில்லை. மார்க்க அறிஞர் பெருமக்களும் கூட கடந்த நூற்றாண்டுகளில் அவ்வாறான எந்த விளக்கவுரையும் தரவில்லை.

உண்மை என்னவென்றால், சில நிபந்தனைகளுடன் இஸ்லாம் அனுமதித்துள்ள பலதாரமணம் என்பது ஆண்களும், பெண்களும் மேலான நல்லொழுக்க குணங்களை வளர்த்துக் கொள்வதற்காகவும், தங்களது கற்புடைமையை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் மகத்தான ஞானத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட செயல் திட்டமாகும். இது நன்மை பயக்கும் நல்லொழுக்க மற்றும் பண்பாட்டிற்கான பாதுகாப்பிற்கான 'வால்வு' (Safety Valve) ஆகும். இந்த பாதுகாப்பு வால்வு இல்லாததன் குறைபாட்டினால், ஒருதார மணத்தை கடுமையான சட்டங்களைக் கொண்டு செயல்படுத்த எண்ணும் சமுதாயங்கள் கட்டுப்பாடற்ற ஆண்–பெண் உறவு, ஓரினச்சேர்க்கை, லெஸ்பியன் உறவு, மிருகத்தனமான வாழ்க்கை ஆகியவற்றால் சீரழிக்கப்பட்டு விட்டன. அவர்களுக்கிடைய சாதாரணமாக நிலவும் கட்டுப்பாடற்ற பாலுணர்வின் ஈடுபாடு குறித்து, இவை நல்லொழுக்க நெறிகளுக்கு மாற்றமானவை என்று எவரும் கூறுவதில்லை.

நல்லொழுக்க நெறிகளின் எல்லைக்கோடு ஒருதார மணத்திற்கும், பலதாரமணத்திற்கும் இடையில் வரையப் படுவதில்லை; மாறாக அது ஒழுக்கத்தை நிலைநிறுத்தலுக்கும்

அனுமதிக்கும் இடையில் இருத்தல் வேண்டும். நல்லொழுக்கக் கட்டுப்பாடுகள் இல்லாத பட்சத்தில் ஒருதாரமணமாக இருப்பினும், பலதாரமணமாக இருப்பினும் அது துஷ்பிரயோகம் செய்யப்படலாம். அவர்களுக்கிடையிலான உறவின் நிலைபாடே அவர்களுக்கு உயர்வை அல்லது தாழ்வைத் தருகிறது. முன்பே கூறியது போன்று இஸ்லாத்தில் மணவாழ்க்கையின் தலையாய நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாகும்.

மேலும் இஸ்லாம் அறிவுப்பூர்வமான ஒழுங்குமுறைகள் மற்றும் செயல்முறைகளின் மூலமாக எல்லா ஆற்றல்களிலும், எல்லா தகுதிகளிலும் உயர்வான வளர்ச்சி ஏற்படுவதை உறுதிப்படுத்துகிறது; இதனை மறைத்து வைப்பதையோ அல்லது ரசனையற்றதாக ஆக்குவதையோ இஸ்லாம் முற்றிலும் தடுத்து கண்டித்து உணர்த்துகிறது.

இஸ்லாமிய ஆரம்ப காலக்கட்டத்தில், இறைநாட்டத்திற்கு இசைந்து, குறிப்பாக ஆண்கள், போர்க்களத்தில் பல ஆண்கள் மக்காவிலும், வேறு பல ஆண்கள் மதீனாவிலும், மற்ற இடங்களிலும் தங்கள் இன்னுயிரை ஈந்தனர். ஆண்களுடன் ஒப்பிடும்போது பெண்கள் ஒட்டுமொத்தமாக போரிலிருந்து விலக்கப்படவில்லை; அவர்களுள் சிலரே மகத்தான தியாகம் செய்வதற்கான வாய்ப்பை பெற்றனர். அதன் காரணமாக முஸ்லிம்களுள் பெண்களின் எண்ணிக்கை விரைவில் ஆண்களை விட அதிகரித்தது. விதவைகள் மற்றும் ஆதரவற்ற ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோருக்கான ஏற்பாடும் செய்ய வேண்டியதிருந்தது. மேலும் நன்னடத்தை, ஆன்மீக நெறிகளைப்

பாதுகாத்தல் போன்ற விஷயங்கள் வரும்போது பலதாரமணம் ஒரு கடமை மற்றும் தியாகமாக ஆனது; நிச்சயமாக பலதாரமணம் ஆசையை நிறைவேற்றும் நோக்கமே இல்லை.

வேறு பல தனிப்பட்ட, சமூக, அரசாட்சி மற்றும் மார்க்கம் சார்ந்த விஷயங்கள் பலதாரமணத்தை அவசியமாக்கின. தற்போதைய காலகட்டத்தில் நிலைமைகள் மாறி விட்டன. ஒருதாரமணம், ஆப்பிரிக்காவுக்கு வெளியே அதிகமதிகமாக சட்டமாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் தனிப்பட்ட வாழ்வியல் நடைமுறையில் எங்கு நோக்கினாலும் நல்லொழுக்க சிந்தனைகள் பலதாரமணத்தையே அங்கீகரிக்கின்றன. இஸ்லாம் அதற்கான வழிவகைகளைச் செய்துள்ளது.

முஸ்லிம்கள் பலதாரமணத்தை அவமானமாகக் கருதுவதில்லை. ஒருதாரமணம்போல் இதுவும் மேன்மைமிக்கது. மேலும் அது மனைவியருக்கிடையில், குழந்தைகளுக்கிடையில் எவ்வித பாகுபாடும் இருத்தல் கூடாது என்பதை உள்ளடக்கியதாக இருக்கிறது.

## தாய்

இஸ்லாம் தாய்க்கு, மேலான கண்ணியத்தை வழங்குகிறது. பெற்றோரிடம் காட்ட வேண்டிய அன்பு, கீழ்ப்படிதல், மென்மையுடன் நடத்தல் – அதிலும் குறிப்பாக தாயாருடன் நடப்பதைக் குறித்து திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறது.

தன் பெற்றோரிடம் நன்முறையில் நடந்து கொள்ள வேண்டும் என மனிதனுக்கு நாம் கட்டளையிட்டுள்ளோம். **(29:9)**

நபியே! நீர் கூறுவீராக: வாருங்கள். உங்கள் இறைவன் தடுத்தவற்றை நான் உங்களுக்கு படித்துக் காட்டுகிறேன். நீங்கள் எப்பொருளையும் அவனுக்கு இணையாக்காதீர்கள். மேலும் பெற்றோரிடத்து மிக்க நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். **(6:152)**

நீங்கள் அல்லாஹ்வை வணங்குங்கள்; அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள். மேலும் பெற்றோரிடத்து மிக்க நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். **(4:37)**

உம்முடைய இறைவன் மிகவும் வலியுறுத்தி இவ்வாறு கட்டளையிட்டுள்ளான்: நீங்கள் அவனையன்றி வேறெதனையும் வணங்காதீர்கள். மேலும் உங்கள் பெற்றோரிடத்து மிக்க நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். அவர்களுள் ஒருவர் அல்லது அவர்களிருவரும் உம்முடைய வாழ்நாளில் முதுமையை எய்தி விட்டால் நீர் அவர்களது விஷயத்தில் வெறுப்பைக் காட்டும் விதத்தில் அவர்களை 'சீ' என்று கூட சொல்லாதீர். அவர்களை ஏசவும் வேண்டாம். அவர்களிடம் எப்பொழுதும் இனிமையாகப் பேசுவீராக. **(17:24)**

கருணை காட்டும் ஆர்வத்துடன் அவர்கள் முன் பணிவாக நடந்து கொள்ளுங்கள். மேலும் கூறுவீராக: என் இறைவா! நான் குழந்தையாக இருந்தபோது என்னை வளர்த்ததுபோல், நீ அவர்களிடம் கருணை காட்டுவாயாக. **(17:25)**

மேலும் நாம் மனிதனுக்கு அவனது பெற்றோரிடம் நல்ல முறையில் நடப்பது குறித்து கட்டளையிட்டுள்ளோம். அவனது தாய் பலவீனத்திற்கு மேல் பலவீனத்தில் அவனை சுமந்தாள். மேலும் அவனுக்கு பால்குடி மறக்கடிக்க இரண்டு வருடங்கள் ஆகின்றன. **(31:15)**

தன் பெற்றோருக்கு நன்மை செய்யுமாறு மனிதனுக்கு கட்டளையிட்டுள்ளோம். அவனது தாய் துன்பத்துடன் அவனை சுமந்து வலியுடன் அவனை பெற்றெடுக்கிறாள். அவனை சுமப்பதற்கும் அவனுக்கு தாய்ப்பால் மறக்கடிக்கவும் முப்பது மாதங்கள் ஆகின்றன. பின்னர் அவன் தனது முழுமையான வாலிபப் பருவத்தை அடைந்து நாற்பது வயதை எட்டியதும், என் இறைவா! நீ எனக்கும் என் பெற்றோருக்கும் அருளிய உன் அருளுக்கு நன்றி செலுத்தவும் உனக்கு விருப்பமான நற்செயல்களை நான் செய்யவும் நீ எனக்கு அருள் புரிவாயாக. மேலும் எனக்காக என் சந்ததிகளை நல்லவர்களாக ஆக்குவாயாக. நிச்சயமாக நான் உனக்கு கீழ்ப்படிந்து நடப்பவர்களைச் சார்ந்தவனாவேன் என்று அவன் கூறுகின்றான். **(46:16)**

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு அறிவுரை கூறியுள்ளார்கள்: உங்களுள் மிகச் சிறந்தவர் தம் குடும்பத்தினருடன் நல்ல முறையில் நடப்பவரே ஆவார். (சுனனுத் திர்மிதி, அப்வாபுல் மனாக்கிப், பாபுன் ஃபீ ஃபழ்லி அஸ்வாஜிந் நபி (ஸல்), ஹதீஸ் எண்.**3895)**

**உங்கள் தாய்மாரின் பாதத்தின் கீழ் சுவர்க்கம் உள்ளது.** (கன்ஸுல் உம்மால் பகுதி 8 பாகம் 16 பக்கம் 192, கிதாபுன் நிகாஹ், கிஸ்மில் அக்வாலில் பாபுஸ் ஸாமினு ஃபீ பிர்ரில் வாலிதைன் ஹதீஸ் எண்.45439)

**எவர் தம் பெண் மக்களை, தன் ஆண் மக்களுக்கு நிகராக எவ்வித பாகுபாடுமின்றி வளர்ப்பாரோ, அவர் சுவர்க்கத்தில் எனக்கு மிக அருகில் இருப்பார்.** (சுனன் அபீதாவூது, அப்வாபுந் நவ்ம், பாபுன் ஃபீ ஃபழ்லிமன் ஆல யதாமா ஹதீஸ் எண்.5146 / முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 4 பக்கம் 403, முஸ்னது அனஸ் இப்னு மாலிக்கின் ஹதீஸ் எண்.12621)

## பெண்களுக்கான பொருளாதார உரிமைகள்

பெண்களுக்கான பொருளாதார சுதந்திரத்தை வழங்குவதில் இஸ்லாம் மட்டுமே பிரசித்தி பெற்ற மார்க்கங்களுக் கிடையில், முன்னணியில் உள்ளது. எல்லாரும் அறிந்த விஷயம் என்னவெனில், இங்கிலாந்து நாட்டில் 1882 –ல் தான் 'மணமான பெண்களுக்கான சொத்துக்கள் குறித்த சட்டம்' நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. அதற்கு முன்னர் ஒரு மணமான பெண் தமது கணவரோடு சேர்ந்தல்லாமல், தான் மட்டும் தனிப்பட்ட நிலையில் சொத்து எதனையும் வைத்துக் கொள்ள முடியாது. மணமாகாத பெண்ணின் சொத்துக்கள் அவள் திருமணம் முடித்ததும் அவளின் கணவருக்கு உரியதாக ஆகி விடும். நூறாண்டுகளுக்கு மேலாகியும் அந்த பிரிட்டீஷ் சட்டத்தில் திருமணமான பெண் தன் கணவரைச் சார்ந்திருப்பது குறித்த சில அம்சங்கள் இன்னும் எஞ்சியுள்ளன.

பெண்களுக்கான சுதந்திரமான பொருளாதார அமைப்பை இஸ்லாம், அதன் தொடக்க காலத்திலேயே நிர்மாணித்து விட்டது. திருமணத்தின் போது கணவர், அவரது தகுதிக்கேற்ப

மனைவிக்கு கொடுக்க வேண்டிய 'மணக்கொடை' பற்றி அறிவிப்பு செய்யப்படுகிறது. அதுவே 'மஹர்' என அழைக்கப்படுகிறது. கணவர் மரணமடையும்போது, மனைவிக்கு மஹர் கொடுக்கப்படாமல் இருந்தால், மற்ற கடன்களை விட இது முதலில் செலுத்தப்பட வேண்டிய முக்கிய கடனாகக் கருதப்பட்டு, அவரது சொத்து சுகங்களிலிருந்து கொடுக்கப்படும். அது மட்டுமல்லாது அந்த விதவைப் பெண்ணுக்கு சட்டப்படி, கணவரின் சொத்து சுகங்களிலிருந்து பங்குக்கான உரிமை உண்டு.

ஒரு பெண் எந்த சொத்தையாவது தமது சொந்த முயற்சியின் மூலமாக அல்லது வாரிசுரிமையாக அல்லது வெகுமதியாக கணவரிடமிருந்து பெற்றுக் கொண்டால் அது அவரின் தனிப்பட்ட சுதந்திர உடைமையாகும். அதனை நிர்வகிக்க அவள் தன் கணவரிடம் கூறலாம்; ஆனால் அதனை மனைவி தாமே நிர்வகிக்க அல்லது மேற்பார்வையிட விரும்பினால், பின் கணவருக்கு அந்த விவகாரங்களில் தலையிட உரிமையில்லை.

ஒரு திருமணமான பெண்ணுக்கு, சொந்தமான வசதிகள் இருந்து, அதிகமானவர்களும் செய்வதுபோல, வீட்டுத் தேவைக்காக அதில் ஒரு பகுதியையோ, முழுமையாகவோ செலவிடலாம். எனினும் அவ்வாறு செய்வது அவர் மீது கடமையில்லை. மனைவி, கணவரை விட செல்வமிக்கவராக இருப்பினும் கூட வீட்டுத் தேவைகளுக்கான முழு பொறுப்பும் கணவரை சார்ந்ததாகும்.

கீழ்க்கண்ட நிகழ்ச்சி இதனைத் தெளிவாக விளக்குகிறது: ஒருமுறை ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் பெண்களிடம் தங்கள்

செல்வத்திலிருந்தும் ஏழைகளுக்கு வழங்கும்படி கட்டளையிட்டார்கள். அப்போது ஸய்னப் என்னும் பெயருடைய இரு பெண்கள், அவர்களுள் ஒருவர் எல்லாராலும் அறியப்பட்ட சஹாபி, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்களின் மனைவியாவார். தூய நபி (ஸல்) அவர்களிடத்தில் வந்து, தங்கள் கணவர்கள் வறுமையில் இருப்பதாகவும், தாங்கள் இருவரும் அவர்களை விட செல்வமிக்கவர்களாகவும் இருப்பதாக கூறினார்கள். அவர்கள் தங்கள் செல்வத்திலிருந்து தங்களின் கணவர்களுக்கு உதவி செய்தல் ஆன்மீகத் தரத்தில் மேலான நற்செயலாக இருக்குமல்லவா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் பெண்களிடம், அவர்கள் தங்கள் கணவருக்காக செய்யும் செலவு இரு மடங்கு நன்மையைத் தரும். ஒன்று, அவர்கள் செய்யும் உதவிக்காகவும். இன்னொன்று, இரத்தபந்தங்களுடன் கருணையுடன் நடந்து கொண்டதற்காக என்று கூறினார்கள்.

திருக்குர்ஆன் இவ்வாறு வலியுறுத்துகிறது: உங்களுள் சிலருக்கு வேறு சிலரை விடவும் அல்லாஹ் எதில் சிறப்பினை வழங்கியுள்ளானோ அதில் பேராசை கொள்ளாதீர்கள். ஆண்கள் எதை சம்பாதித்தனரோ அதில் அவர்களுக்குரிய பங்கு உண்டு. அதேபோல் பெண்கள் எதனை சம்பாதித்தனரோ அதில் அவர்களுக்குரிய பங்கு உண்டு. நீங்கள் அல்லாஹ்விடம் மட்டும் அவனுடைய அருளைத் தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கு அறிகின்றவன் ஆவான். **(4:33)**

பெற்றோர்களும், நெருங்கிய உறவினர்களும் மற்றும் உங்களின் உறுதிமொழியால் உடன்படிக்கை செய்து

கொள்ளப்பட்டவர்களும் (மனைவி அல்லது கணவர்) விட்டுச் செல்கின்றவற்றிற்கு வாரிசுகளை நாம் நியமித்துள்ளோம். எனவே அவர்களுக்கும் அவர்களது பாகத்தைக் கொடுத்து விடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றையும் கண்காணிப்பவனாவான். (4:34)

திருமறை வசனம் 4:12,13 மற்றும் 177 –ல் கூறப்பட்டுள்ள வாரிசுதாரர்கள், வம்சாவழியினருக்கான இஸ்லாமிய சட்ட நடைமுறையின் நோக்கம் சொத்துக்கள் பரந்த அளவில் பங்கிடப்பட வேண்டும் என்பதாகும். ஓர் ஆண் அல்லது பெண் தம்முடைய பெற்றோரை, அல்லது மனைவி அல்லது கணவரை, ஆண் மக்களை அல்லது பெண் மக்களை விட்டு விட்டு மரணமடைந்து விட்டால், அவர்கள் எல்லாருக்கும் வாரிசுதாரர்கள் என்ற முறையில் பங்கு உண்டு. பொதுவான சட்டத்தின்படி அதே உறவுமுறையின் அடிப்படையில் ஆணுக்கு பெண்ணைப் போன்று இரு மடங்கு கிடைக்கும். இதில் பெண் வாரிசுகள் மீது எவ்வித பாரபட்சமும் காட்டப்படவில்லை; ஏனெனில் ஆண்தான், தன் குடும்பத்திற்கு முழு பொறுப்பாளி ஆவார். ஆனால் பெண்ணுக்கோ அப்படிப்பட்ட எந்த பொறுப்பும் இல்லை. நடைமுறையில் பார்க்கும்போது இச்சட்டம் பெண் வாரிசுக்கு நன்மை பயக்கக் கூடியதாக உள்ளது.

ஒரு முஸ்லிம் தனது சொத்தில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் உயிலின் அடிப்படையில் கொடுக்க முடியாது. பரம்பரைச் சொத்தை தானமாக வழங்குவது அல்லது வாரிசு இல்லாத மற்றவர்களுக்கு கொடுப்பதும் கூட நிகர சொத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாக இருக்கக் கூடாது. அது மட்டுமல்லாது

மரணசாஸனத்தின் அடிப்படையில் வாரிசுடைய பங்கை அதிகப்படுத்தவோ அல்லது குறைக்கவோ இயலாது. இஸ்லாமிய சட்டத்தின்படி வாரிசுகளுக்கிடையில் சொத்து பங்கீட்டில் எவ்வித பாரபட்சத்திற்கும் வழியில்லை. எடுத்துக்காட்டாக, பெற்றோரின் முதல் பிள்ளை என்பதால் எவ்வித சலுகையுமில்லை. பெண் மக்களுக்கு கொடுக்காமல் விட்டு விடவும் இயலாது.

கொடுக்கல், வாங்கல் உரிமை பிரேரணைகள் எந்த அளவுக்கு பாதுகாக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப் பட்டுள்ளதென்றால், அதனை எழுத்தில் கொண்டு வர வேண்டும். இதுபற்றி சிலவேளைகளில் தவறுதலாக இது பெண்கள் மீது இழைக்கப்படும் அநீதி என்று கூறப்படுகிறது. திருக்குர்ஆன் கூறுவதாவது: உங்களுடைய ஆண்களுள் இருவரை சாட்சிகளாக ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஆண்கள் இருவர் இல்லாவிட்டால் சாட்சிகளாக இருப்பதற்கு நீங்கள் விரும்புபவர்களுள் ஒர் ஆணையும், இரு பெண்களையும் சாட்சிகளாக ஆக்கிக் கொள்ளுங்கள். ஏனெனில் ஒருவர் மறந்து விட்டால் மற்றொருவர் நினைவூட்டுவார். **(2:283)**

இங்கு சிறிதளவு கூட பாரபட்சத்திற்கான சுவடு இல்லை. பொதுவான சட்டத்தின்படி தற்செயலாக நிகழும் நீதிமன்ற வழக்குகள் சார்ந்த சாட்சியங்களுக்காக செல்வத்திலிருந்தும் பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆதலால், பொதுவாக பெண்கள் கொடுக்கல், வாங்கல் குறித்த பத்திரத்தில், அதன் உண்மைக்கு சான்றளிக்கும்படி கோரப்படக் கூடாது. இச்சட்டம் அவசர வேளைகளில் தளர்த்தப்படலாம். ஆனால் அப்போது மற்றொரு கஷ்டம் ஏற்படலாம். ஆண் சாட்சிகளைப்

பொருத்தமட்டில், அவர்கள் சாட்சியாக இருந்து ஒப்பமிட்ட பணப்பரிவர்த்தனை பற்றிய நினைவுகள் அவர்கள் சமூகத்தில் ஒருவரையொருவர் சந்திக்கும் போது ஏதோ ஒரு காரணத்திற்கான ஞாபகத்திற்கு கொண்டு வரப்படலாம். கொடுக்கல், வாங்கல் பற்றிய பதிவேட்டில், உண்மை என்று சான்றளிக்க ஓர் ஆணும், ஒரு பெண்ணும் இருந்தால் – இஸ்லாமிய சட்டப்படி பெண்சாட்சி இருப்பது – அவர் அடிக்கடி அந்த ஆண் சாட்சியை சந்தித்து பேசும் வாய்ப்பு இருக்காது; அவ்வாறிருக்கும் போது நடந்து முடிந்த பணபரிவர்த்தனை ஞாபகத்தில் வர குறைந்த வாய்ப்பே உள்ளது. இவ்வாறு ஞாபகத்தைத் தூண்டும் விஷயங்களில் உள்ள குறைபாடுகளைக் களையவே யுக்தியுடன் கூறப்பட்டுள்ளது. அதாவது, எப்போது ஓர் ஆண் சாட்சி மட்டும் இருப்பாரோ, அப்போது இரண்டு பெண் சாட்சிகளை அழைத்துக் கொள்ள வேண்டும்; காரணம் ஒருவர் மறந்தால் மற்றவர் நினைவூட்டுவார்.

இந்த ஏற்பாடு சாட்சியத்தை பாதுகாப்பது சம்பந்தப்பட்டது மட்டுமே தவிர எழுதப்பட்ட சாஸனம் ஆண் சாட்சியாயினும், பெண் சாட்சியாயினும், அதன் மதிப்பைப் பற்றியதல்ல.

இவ்விஷயத்தில் உங்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு ஒரு தெளிவான விளக்கம் தீர்வாக அமையும். அதாவது ஒரு பதிவு செய்யப்பட்ட கொடுக்கல், வாங்கல் ஆவணம் ஓர் ஆண் மற்றும் இரு பெண் சாட்சிகளால் சான்றளிக்கப்பட்ட பின், அது பிரச்சனைக்குள்ளாகி நீதிமன்ற விசாரணைக்கு வருவதாக வைத்துக் கொள்வோம். அப்போது இருவருள் ஒரு பெண் சாட்சி மரணமுற்றதாக அறியப்படுகிறது. நீதிமன்றம் அந்த ஆண்

சாட்சியையும், மற்ற பெண் சாட்சியையும் விசாரித்தபோது, அவ்விருவரின் சாட்சியங்களும் கொடுக்கல், வாங்கல் குறித்து முற்றிலும் மாறுபட்டவையாக உள்ளன என்று நீதிபதி கருதுகிறார்; எனினும் ஒவ்வொரு விஷயத்தையும் அவர் கவனத்தில் கொண்டு பார்க்கின்றபோது, அவர் உறுதியாக பெண்ணின் சாட்சியத்தில் ஆண் சாட்சியத்தை விட நம்பகத்தன்மை அதிகமாக இருப்பதாக உணர்கிறார். அப்படிப்பட்ட தருணத்தில் அவருடைய நோக்கம் அந்த ஆணுடைய சாட்சியத்தை விட பெண்ணின் சாட்சியத்தை ஏற்றுக் கொள்வதே அவரது கடமையாகும். இவ்விடத்தில் பெண்ணுக்கு சார்பாக அல்லது எதிராக பாகுபாடு காட்டப்படுகிறது என்ற பேச்சுக்கே இடமில்லை.

## ஆண்கள் மற்றும் பெண்களுக்குரிய பாதுகாப்பை வழங்குதல்

ஆண்களும் பெண்களும் ஒருவருக்கொருவர் ஆன்மீக ரீதியில் கிடைக்கப் பெற்ற அருட்கொடை ஆவர்; இதனைக் கட்டிக் காத்து, முழுமை பெறச் செய்து இறை திருப்தியைப் பெற வேண்டும். இருவரையும் படைத்த இறைவனுக்கு நிச்சயமாக அவர்களின் பலவீனமும், பலமும் நன்றாகத் தெரியும்; அவன் தனது கருணையால் பலவீனத்திலிருந்து பாதுகாப்பதற்கும் அவர்களின் ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கும் தேவையான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளான். அந்த வழிகாட்டுதலை உதாசீனப்படுத்துவதால் தீங்கும், நாசமும் ஏற்படுகின்றன; கவனமாக அதனைப் பின்பற்றி நடந்தால் வாழ்க்கை அமைதி நிறைந்ததாக, மகிழ்ச்சிமிக்கதாக ஆகி விடுகிறது.

தூய திருக்குர்ஆன் இதனை இவ்வாறு இயம்புகிறது: நிச்சயமாக நாம் மனிதனைப் படைத்தோம்; மேலும் அவனுடைய உள்ளம் முணுமுணுப்பதையும் நாம் அறிவோம். **(50:17)**

நாம் மனிதனை சோதிப்பதற்காக பல்வேறு ஆற்றல்களின் கலவையான ஒரு விந்துத் துளியிலிருந்து அவனைப் படைத்தோம். நாம் அவனை நன்கு கேட்கின்றவனாகவும், பார்க்கின்றவனாகவும் மாற்றினோம். நாம் அவனுக்கு வழியைக் காட்டியுள்ளோம். அவன் நன்றி செலுத்துபவனாகவோ, நன்றி கெட்டவனாகவோ இருக்கட்டும். **(76:3–4)**

மனிதனின் கேட்கும் சக்தி, பார்க்கும் திறன் மற்றும் ஏனைய புலன்கள் மூலமாக அவனது உள்ளத்தில் நல்லதும், தீயதும் பதிவு செய்யப்படுகின்றன. அதனால் அவன் இவ்வாறு எச்சரிக்கை செய்யப்படுகின்றான்:

உமக்கு எதனைப் பற்றி அறிவு இல்லையோ, அதனைப் பின்பற்றாதீர். ஏனெனில், கண், காது, மனம் இவை எல்லாவற்றையும் குறித்து உம்மிடம் விசாரிக்கப்படும். **(17:37)**

எனவே புலன்களை அடக்கி ஆள்வதும், நிரந்தர கண்காணிப்பின் கீழ் அவற்றை வைப்பதும் நல்லொழுக்கத்தின் முக்கிய அம்சங்களாகும். ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கட்டளையிடப்பட்டுள்ளார்கள்:

நீர் நம்பிக்கை கொண்ட ஆண்களிடம் அவர்கள் தங்கள் பார்வைகளைக் கீழ்நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் கூறுவீராக. இது அவர்களுக்கு மிகத் தூய்மையானதாகும்.

நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்வதனை நன்கு அறிபவனாவான். **(24:31)**

நீர் நம்பிக்கை கொண்ட பெண்களிடம் அவர்கள் தங்கள் பார்வைகளை கீழ்நோக்கி வைத்திருக்குமாறும், தங்கள் மறைவான உறுப்புகளைப் பாதுகாத்துக் கொள்ளுமாறும் தானாகவே வெளிப்படுவதைத் தவிர தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமல் இருக்குமாறும் தங்கள் முந்தானை ஆடையால் தங்கள் மார்புகளை மறைத்து அணிந்து கொள்ளுமாறும், அவர்கள் தங்கள் கணவர்கள் அல்லது தங்கள் தந்தையர்கள் அல்லது தங்கள் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தங்கள் ஆண்மக்கள் அல்லது தங்கள் கணவர்களின் ஆண்மக்கள் அல்லது தங்கள் சகோதரர்கள் அல்லது தங்கள் சகோதரர்களின் ஆண்மக்கள் அல்லது தங்கள் சகோதரிகளின் ஆண்மக்கள் அல்லது தங்கள் இனத்தைச் சார்ந்த பெண்கள் அல்லது தங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள் அல்லது பாலுணர்ச்சிக்கு அப்பாற்பட்ட ஆண் ஊழியர்கள் அல்லது பெண்களின் மறைவான உறுப்புகளைப் பற்றித் தெரியாத சிறுவர்கள் ஆகியவர்களைத் தவிர வேறெவரிடமும் தங்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாமலிருக்குமாறும் தங்கள் அலங்காரத்துள் மறைத்து வைத்திருப்பது வெளிப்பட வேண்டும் என்பதற்காக தங்கள் கால்களைத் தட்டி நடக்காமலிருக்குமாறும் கூறுவீராக. நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் யாவரும் வெற்றி பெற வேண்டுமென்றால் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள். **(24:32)**

“நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களும், உங்களுள் பருவம் அடையாதவர்களும், மூன்று நேரங்களில் உங்களிடம் அனுமதி பெற்று உள்ளே வர வேண்டும். அதாவது, ஃபஜ்ர் தொழுகைக்கு முன்னும், நடுப்பகலில் நீங்கள் உங்கள் ஆடைகளை களைந்திருக்கும் நேரத்திலும், இஷா தொழுகைக்குப் பின்னரும் ஆகும். இவை நீங்கள் மறைவாக இருக்கும் மூன்று நேரங்களாகும். இவையல்லாத மற்ற நேரங்களில் உள்ளே சென்று வருவதால் உங்கள் மீதோ, அவர்கள் மீதோ குற்றமில்லை. ஏனென்றால் உங்களுள் சிலர், சிலரிடம் பெரும்பாலும் அத்தியாவசியத் தேவைக்காக வந்து செல்பவர்களாக உள்ளனர். இவ்வாறு அல்லாஹ் தனது கட்டளைகளை உங்களுக்கு மிகத் தெளிவாக விளக்குகின்றான். அல்லாஹ் நன்கு அறிபவனும் நுட்பமான ஞானமுள்ளவனுமாவான்.” **(24:59)**

“உங்கள் குழந்தைகள் பருவமடைந்து விட்டால் அவர்களும் தங்களுக்கு முன்னுள்ள பெரியவர்கள் அனுமதி பெற்றதுபோல் அனுமதி பெற வேண்டும். இவ்வாறு அல்லாஹ் தன் கட்டளைகளை உங்களுக்குத் தெளிவாகக் கூறுகிறான். அல்லாஹ் நன்கு அறிபவனும் நுட்பமான ஞானமுள்ளவனுமாவான்” **(24:60)**

“திருமணம் செய்யும் தகுதியை இழந்த வயது முதிர்ந்த பெண்கள் அலங்காரத்தை வெளிப்படுத்தாத முறையில் தங்கள் மேலாடைகளை களைந்து வைத்திருப்பது அவர்கள் மீது குற்றமன்று. ஆயினும் அவர்கள் அதனைக் கூட தவிர்த்துக் கொள்வது அவர்களுக்கு சிறந்ததாகும். அல்லாஹ் நன்கு கேட்பவனும் நன்கு அறிபவனுமாவான்.” **(24:61)**

ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் மனைவியருக்கு சில குறிப்பிட்ட சிறப்பான வழிகாட்டல் அருளப்பட்டுள்ளது. மிகச் சிறந்த நல்லொழுக்கம் நிலைபெற இதனை நம்பிக்கை கொண்ட பெண்கள் யாவரும் கடைபிடிக்க வேண்டும்.

“நபியே! நீர் உமது மனைவியரிடம் கூறுவீராக: நீங்கள் உலகையும் அதன் அலங்காரத்தையும் விரும்பினால், வாருங்கள். நான் உங்களுக்கு உலகப் பொருட்களுள் சிலவற்றை வழங்கி அழகிய முறையில் உங்களை விடுவித்து விடுகிறேன். நீங்கள் அல்லாஹ்வையும் அவனது தூதரையும், மறுமை வீட்டையும் விரும்பினால், நிச்சயமாக அல்லாஹ் உங்களுள் நன்மை செய்பவர்களுக்கு மாபெரும் கூலியினை ஆயத்தப்படுத்தி வைத்துள்ளான். நபியின் மனைவியரே! உங்களுள் எவராவது மேலான நம்பிக்கைக்கு மாற்றமான ஒன்றைச் செய்தால் அவருக்கு இரு மடங்கு தண்டனை வழங்கப்படும். உங்களுள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் பணிந்து நற்செயலை செய்பவருக்கு அவரின் கூலியினை நாம் இரு மடங்காக வழங்குவோம். மேலும் வாழ்விற்குரிய கண்ணியமான பொருட்களையும் நாம் அவர்களுக்காக ஆயத்தப்படுத்தி வைத்துள்ளோம்.” **(33:29–32)**

“நபியின் மனைவியரே! நீங்கள் இறையச்சமுடையவர்களாயின், மற்ற பெண்களிலிருந்தும் தனித்தன்மை வாய்ந்தவர்களாவீர்கள். எனவே உள்ளத்தில் நோய் உடையவன் உங்களைக் குறித்து ஏதேனும் தீய எண்ணம் கொள்ளாதிருக்க, நீங்கள் மிக மிருதுவாக பேசாதீர்கள். மேலும் நீங்கள் நல்ல வார்த்தைகளைக்

கூறுங்கள். நீங்கள் உங்கள் வீடுகளில் தங்கியிருங்கள். பண்டைய அறியாமைக் கால முறையைப் போன்று நீங்கள் அலங்காரம் செய்யாதீர்கள். மேலும் தொழுகையினை நிறைவேற்றுங்கள். ஸக்காத்தை கொடுங்கள். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடங்கள். நபியின் வீட்டினரே! அல்லாஹ் உங்களிடமிருந்து தூய்மையின்மையை அகற்றி உங்களை முழுமையாக தூய்மைப்படுத்தவே விரும்புகிறான். உங்களின் வீடுகளில் ஓதப்படுகின்ற அல்லாஹ்வின் வசனங்களையும், ஞானத்தையும் நினைவில் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக நுட்பமானவனும் எல்லாம் அறிபவனுமாவான்.'' **(33:33–35)**

ஆண்களும், பெண்களும் உயரிய நல்லொழுக்கத்தை கைக்கொள்ள வேண்டும் என்பதற்காக இந்த வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் எல்லா சந்தர்ப்பத்திலும் மரியாதையுடனும் அடக்கத்துடனும், சுய கட்டுப்பாட்டுடனும் நடக்க வேண்டும். தன்னடக்கம், வெட்கம், தூய்மை ஆகிய இவை இஸ்லாமிய சமூக அமைப்பின் தன்னிகரற்ற சின்னங்களாகும். தடையற்ற, கட்டுப்பாடு இல்லாத வகையில் ஆணும், பெண்ணும் கலந்து அளவளாவுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரு குறிப்பிட்ட அளவிலான நல்லொழுக்கம் தேவைப்படுகிறது. பெண்கள் எல்லா வித தொல்லைகளிலிருந்தும் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காகவே பின்வரும் இக்கட்டளை தரப்பட்டுள்ளது:

''நபியே! நீர் உமது மனைவியரிடமும், உம் பெண்மக்களிடமும் நம்பிக்கை கொண்ட பெண்களிடமும்

அவர்கள் வெளியில் செல்லும்போது தங்களுடைய பெரிய மேலாடைகளைக் கொண்டு தங்களைப் போர்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக. இது அவர்கள் பிரித்தறியப்படுவதற்கு மிகவும் பொருத்தமானதாகும். அவர்கள் துன்புறுத்தப்படமாட்டார்கள், அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.'' **(33:60)**

தடையற்ற, கட்டுப்பாடில்லாத ஆண்கள் பெண்களின் தொடர்பு, ஆண்களைக் கவர்ந்திழுப்பதற்காக பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வது போன்ற நடைமுறையால் மேற்கத்திய சமூகம் நாசமடைந்து போய் விட்டது; எவ்வாறென்றால் எல்லாவித நாணமும், ஒழுக்கமும் புறந்தள்ளப்பட்டு விட்டன; பாரம்பரிய, போற்றத்தக்க குணங்கள் அலட்சியம் செய்யப்பட்டு எள்ளிநகையாடப்பட்டு விட்டன. மிகவும் வருத்தம் தரும் விஷயம் என்னவெனில், இந்த தற்கொலைக்குச் சமமான நிலைமையை மேற்கத்திய முஸ்லிம்களில் ஒரு பகுதியினரால் தடுக்க முடியவில்லை. இறையச்சத்துடன் நாம் எதிர்பார்ப்பது என்னவென்றால் இவ்வாறாகத் தொடரும் இந்த ஆபத்துகள் விரைவில் கண்டறியப்பட்டு, நன்மை பயக்கும் இஸ்லாமிய மரபுகள் போற்றப்பட்டு அவை நிச்சயமாக கண்டிப்புடன் பின்பற்றப்பட வேண்டும்.

## ஹஸ்ரத் தூய நபி (ஸல்) அவர்களின் நபிமொழிகள்

❖ ஹக்கீம் இப்னு முஆவியா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்களிடம், கணவரிடத்தில் மனைவிக்கான உரிமைகள் என்ன? என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் உண்ணும்போது அவருக்கும் உண்ணக் கொடுங்கள். நீங்கள் நல்ல ஆடை அணியும் போது அவருக்கும் அணியக் கொடுங்கள். அவருடைய முகத்தில் அடிக்காதீர்கள். அவர்களை ஏசாதீர்கள். அவர்களை உங்களிடமிருந்து உங்கள் வீட்டினுள் தவிர பிரிக்காதீர்கள் என்று கூறினார்கள். (சுனன் அபீதாவூது, கிதாபுன் நிகாஹ், பாபுன் ஃபீ ஹக்கில் மர்அதி அலா ஸவ்ஜிஹா ஹதீஸ் எண். 2142)

❖ அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நன்னடத்தை உடையவர்தான் ஈமானைப் பொருத்தமட்டில் நம்பிக்கை கொண்டவர்களில் மிக மேலானவர் ஆவார். அதில் உங்களுள் சிறந்தவர் தம் மனைவியருடன் மிக்க நல்ல முறையில் நடப்பவரே ஆவார். (சுனனுத் திர்மிதி, அப்வாபுர் ரஸா, பாபு மாஜாஅ ஃபீ ஹக்கில் மர்அதி அலா ஸவ்ஜிஹா ஹதீஸ் எண். 1162)

❖ அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவ்வுலகம் பொருட்கள் நிறைந்த இடமாகும். அவற்றுள் மிக்க மேலானது ஒரு நல்ல பெண் ஆவார். (சஹீஹுல் முஸ்லிம், கிதாபுர் ரிழா, பாபு ஹைருமதாயித் துன்யா அல் மர்அத்துஸ் சாலிஹா, ஹதீஸ் எண்.3649)

❖ ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: ஒரு பெண் தமது இரண்டு பெண் குழந்தைகளுடன் யாசகம் கேட்டு வந்தார். என்னிடம் அப்போது ஒரு பேரீச்சம்பழத்தைத் தவிர வேறொன்றும் அவருக்குக் கொடுப்பதற்காக இல்லை. அதை அவரிடம் கொடுத்தேன். அவர் அதை இரண்டாகப் பங்கிட்டு இரு குழந்தைகளுக்கும் கொடுத்தார். அதிலிருந்து அவர் சாப்பிடவில்லை. பிறகு அவர் எழுந்து சென்று விட்டார். பின் நபி (ஸல்) அவர்கள் வந்தபோது, இதுபற்றி அவர்களிடம் கூறினேன். அவர்கள் எவர் பெண்மக்களால் சோதிக்கப்பட்டு, அவர்களை நல்ல முறையில் நடத்துவாரோ அவருக்கு அம்மக்கள் நெருப்பிலிருந்து காப்பாற்றும் திரையாக இருப்பார்கள் என்று கூறினார்கள். (சஹீஹுல் புகாரி, கிதாபுஸ் ஸகாத், பாபுன் இத்தகுன் நாரா வலவ் பி ஷிக்கின் தம்ரதின் வல் கலீலி மினஸ்ஸதக்கா, ஹதீஸ் எண். 1418 / சஹீஹுல் முஸ்லிம், கிதாபுல் பிர்ரி வஸ்ஸிலதி வல் அதபி, பாபு ஃபழ்லில் இஹ்ஸானி இலல் பனாத்தி ஹதீஸ் எண்.6693)

❖ அபூஷுரைஹ் அல் குஸாயீ (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வே! அனாதைகள், பெண்கள் ஆகிய இந்த இரு பலவீனமானவர்களின் உரிமைகளைப் பாதுகாக்காதவர் சாபத்திற்குரியவரே. (சுனனுல் குப்ரா லிந்நஸாயி தொகுதி 5 பக்கம் 363, கிதாப் 'இஷ்ரத்திந் நிஸா' பாபு ஹக்குல் மர்அதி அலா ஸவ்ஜிஹா, ஹதீஸ் எண். 9302)

❖ அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: பெண்களை அன்புடன் நடத்துங்கள். ஏனென்றால் பெண் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டிருக்கின்றார். மேலும் விலா எலும்பிலேயே அதன் மேற்பகுதி

கோணலானதாகும். நீங்கள் அதனை நேராக்க நினைத்தால், அதை முறித்து விடுவீர்கள்; நீங்கள் அதனை அப்படியே விட்டு விட்டால் அது கோணலாகவே இருக்கும். எனவே பெண்கள் மீது பரிவுடன் நடந்து கொள்ளுங்கள். (சஹிஹுல் புகாரி, கிதாபு அஹாதீஸுல் அம்பியா. பாபு ஹல்கி ஆதம் வ துர்ரிய்யத்திஹீ ஹதீஸ் எண். 3331 / சஹீஹுல் முஸ்லிம், கிதாபுர் ரிழா பாபுல் வஸிய்யதி பிந்நிஸா)

❖ அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எந்த முஸ்லிம் ஆணும், எந்த முஸ்லிம் பெண்ணுடனும் வெறுப்பு கொள்ள வேண்டாம். அவருக்கு அவளது ஒரு செயல் பிடிக்கவில்லையெனில், மற்றொரு செயல் பாராட்டத்தக்கதாக இருக்கும். (சஹீஹுல் முஸ்லிம், கிதாபுர் ரிழா பாபுல் வஸிய்யதி பிந்நிஸா ஹதீஸ் எண்.3645)

❖ அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கணவர் தம்முடைய மனைவியை படுக்கைக்கு அழைக்கும்போது அவர் வர மறுத்து, அதனால் அவர் தனியாக அவள் மீது வெறுப்புற்று இரவைக் கழித்தால், வானவர்கள் இரவு முழுவதும் அவளை சபித்துக் கொண்டிருப்பர். (சஹீஹுல் புகாரி, கிதாபுன் நிகாஹ், பாபு இதா பாதத்தில் மர்அத்து முஹாஜிரத்தன் ஃபிராஷ ஸவ்ஜிஹா ஹதீஸ் எண்.5193)

❖ அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒருவர் மற்றொருவருக்கு சிரம் தாழ்த்த வேண்டும் எனக் கட்டளை இருந்திருந்தால், மனைவி, கணவன் முன் சிரம் தாழ்த்த வேண்டும் என நான் கட்டளையிட்டிருப்பேன். (சுனனுத் திர்மிதி, அவ்வாபுர் ரழா, பாபு மாஜாஅ ஃபீ ஹக்கிஸ் ஸவ்ஜி அலல் மர்அத்தி ஹதீஸ் எண்.1159)

❖ உம்மு சல்மா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கணவன் திருப்தி அடைந்த நிலையில் அவரது மனைவிக்கு மரணம் சம்பவித்தால், அவள் சுவர்க்கவாசி ஆவார். (சுனனுத் திர்மிதி, அப்வாபுர் ரழா, பாபு மாஜாஅ ஃபீ ஹக்கிஸ் ஸவ்ஜி அலல் மர்அத்தி ஹதீஸ் எண்.1161)

❖ உஸாமா பின் ஸைது (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆண்களுக்கு அதிகமாக கேடு பயக்கும் சோதனையாக பெண்களைத் தவிர வேறெதனையும் நான் விட்டுச் செல்லவில்லை. (சஹீஹுல் புகாரி, கிதாபுன் நிகாஹ், பாபு மா யுத்தக மின் ஷுஃமில் மர்அத்தி, ஹதீஸ் எண். 5096 / சஹீஹுல் முஸ்லிம், கிதாபுர் ரிகாக், பாபு அக்ஸரி அஹ்லில் ஜன்னத்தில் ஃபுகராவு வ அக்ஸரி அஹ்லின் நாரின் நிஸா)

❖ அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறை வழியில் நீங்கள் செலவிடும் ஒரு தினாரும், ஓர் அடிமையை விடுவிப்பதற்காக நீங்கள் செலவிடும் ஒரு தினாரும், தர்மமாக நீங்கள் கொடுக்கும் ஒரு தினாரும், உங்கள் மனைவி மக்களுக்காக நீங்கள் செலவிடும் ஒரு தினாரும் ஆகிய இவற்றுள் வெகுமதியைப் பொருத்தமட்டில் மேலான அந்தஸ்தைப் பெறுவது நீங்கள் உங்கள் மனைவி மக்களுக்காக செலவிட்ட ஒரு தினாரே ஆகும். (சஹீஹுல் முஸ்லிம், கிதாபுஸ் ஸகாத், பாபு ஃபழ்லின் நஃபகதி அலல் இயாலி வல் மம்லூக்கி வ இஸ்மி மன் ழய்யஅஹும் அவ் ஹபஸ நஃபகதஹும் அன்ஹும், ஹதீஸ் எண். 2311)

❖ சஅத் இப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் ஒரு நீண்ட ஹதீஸில் அறிவிப்பதாவது, நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் திருப்தியை நாடி நீங்கள் எதனை செலவு

செய்தாலும் அதற்கான நற்கூலியைப் பெற்றுக் கொள்வீர்கள். அது உங்கள் மனைவியின் வாயில் இடும் ஒரு கவள உணவாக இருந்தாலும் சரியே. (சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஈமான், பாபு மாஜாஅ அன்னல் அஃமால பின் நிய்யதி வல் ஹிஸ்பதி, ஹதீஸ் எண்.56 / சஹீஹுல் முஸ்லிம், கிதாபுல் வஸிய்ய, பாபுல் வஸிய்யதி பிஸ்ஸுலுஸி ஹதீஸ் எண்.4209)

❖ ஆயிஷா (ரலி) அவர்கள் கூறியதாவது: கதீஜா (ரலி) அவர்களின் மீது நான் ஆதங்கம் கொண்டதைப் போன்று நபி (ஸல்) அவர்களின் எந்த மனைவியின் மீது ஆதங்கம் கொண்டதில்லை. நான் அவரைப் பார்த்ததில்லை. ஆனால் நபி (ஸல்) அவர்கள் அவரை அதிகமாக நினைவு கூர்ந்து பாராட்டி பேசி வந்தார்கள். அவர்கள் சில வேளைகளில் ஆட்டை அறுத்து பல துண்டுகளாகப் பிரித்து, பிறகு அதை கதீஜாவின் தோழியரிடையே பங்கிட்டு அனுப்பி விடுவார்கள். சில வேளைகளில் நான் நபி (ஸல்) அவர்களிடம், உலகில் கதீஜாவைத் தவிர வேறெந்த பெண்ணும் இல்லாதது போன்று நடந்து கொள்கிறீர்களே என்று கேட்டதுண்டு. அப்போது அவர்கள், அவர் இவ்வாறு இவ்வாறு (நற்குணமும், புத்திசாலித்தனமும்) கொண்டவராக இருந்தார். மேலும் எனக்கு அவர் வாயிலாகத்தான் பிள்ளைச் செல்வம் கிடைத்தது என்று பதில் கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாப் மனாக்கிபில் அன்ஸார், பாபு தஸ்வீஜின் நபிய்யி கதீஜத வ ஃபழ்லிஹா, ஹதீஸ் எண். 3818 / சஹீஹுல் முஸ்லிம், கிதாப் ஃபழாயிலிஸ் ஸஹாபா, பாபு மின் ஃபழாயிலில் கதீஜத உம்மில் முஃமினீன் ஹதீஸ் எண்.6278)